53

செந்தமிழ்ச் செல்வி

சிலம்பு-உ௦] சுபானு—புரட்டாசிமீ 1943 53 [பரல் கக

பொருளடக்கம்,

குறிப்புக்கள் :

சீவக சிந்தாமணி :
பண்டிதமணி

சடு குடு :
வித்துவான் ஞா. தேவநேயன், B. O. L.

பாட்டின் இயல் :
ம. ரா பாலகணபதி, [illegible] T.

குரல் மத்திமமே ; சட்சமன்று
வித்துவான் க. வெள்ளைவாரணனார்

இயற்கையிற் காதல் :
வித்துவான் ஜி. சுப்பிரமணிய பிள்ளை, M. A., B. L.

தென்னாட்டு வீரன் :
புத்தனேரி ரா. சுப்பிரமணியன்

செய்திகள் :

72
O31,2.11,N26
N43.20.11
199669

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிட்டெட், சென்னை.

கூட்டத்து உறுப்பினர்கள்

தலைவர் :

ஸ்ரீ. பண்டித நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்,
தஞ்சை.

---

2. ,, பி. சிதம்பரம் பிள்ளையவர்கள், பி. ஏ., பி. எல்.,
வழக்குரைஞர், நாகர்கோவில்.

3. ,, கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், எம். ஏ., எம். எல்.,
தமிழ்ப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

4. ,, துடிசைகிழார் அ. சிதம்பரனாரவர்கள்,
பென்ஷன் போலீஸ் சர்க்கின் இன்ஸ்பெக்டர், கோவை.

5. ,, மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச்
செட்டியாரவர்கள், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

6. ,, டி. எஸ். கந்தசாமி முதலியாரவர்கள், பி. ஏ.,
வழக்குரைஞர், சாத்தூர்.

7. ,, காழி சிவ. கண்ணுசாமிப் பிள்ளையவர்கள், பி. ஏ.,
தருமபுரவாதீன வித்துவான், சென்னை.

8. ,, வித்துவான் மா. இராசமாணிக்கம் அவர்கள், பி. ஓ. எல்.,
தமிழாசிரியர், முத்தியாலுப்பேட்டை உயர்பள்ளி, சென்னை.

9. ,, வித்துவான் மு. இராசாக்கண்ணு அவர்கள், பி. ஓ. எல்.,
தமிழாசிரியர், அரசினர் விக்டோரியா கல்லூரி, பாலக்காடு.

10. ,, இளவழகனாரவர்கள், கழகப் புலவர்.

தாரண பஞ்சாங்கமும், 1944 குறள் நாட்குறிப்பும் 15-11-43-ல்
வெளிவரும்.

தாரண ஆண்டு வாக்கிய சைவப் பஞ்சாங்கம்
அச்சிலிருக்கின்றது.

1944 திருக்குறள் நாட்குறிப்பு

"3 × 2" அங்குலம் அளவு அட்டைக் கட்டு விலை அணா 9
,, கனத்த தாள் கட்டு விலை அணா 7
வழக்கம்போல் பெரிய அளவு (சில பிரதிகளே அச்சிடு
கின்றோம்.) தனிப்பிரதி விலை ரூ. 1

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
6, பவழக்காரத் தெரு, சென்னை.

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-உ௦] சுபானு—புரட்டாசி (1943) [பரல்-கக

குறிப்புக்கள்

உமையாள்—இராமநாதன் திருமணம்:

செட்டிமார் நாட்டின் கொட்டையூர் வள்ளல் க. வீ. அழ. ராம. அழகப்ப செட்டியார் எம். ஏ; பார்-அட்-லா அவர்கள் தம் அருமைப்புதல்வியார் **திருவளர்செல்வி உமையாள்** என்பவர்க்கு ஆவணி 25-ம் நாள் (10-9-43) தம் இல்லத்தில் திருமணம் நிகழ்த்தினார்கள். அது சிறந்த வரலாற்று நிகழ்ச்சியாய் விளங்கித் தமிழ் நாட்டுக்கே ஒரு தனிப்பெருஞ் சிறப்பினை விளைத்திருக்கின்றது. நாட்டின் பெருமக்கள் திரள், பல்லாயிரவர் விருந்தினர், இடையறாத இசைநாடக இயற்றமிழ்ப் பொழிவுகள், கண்டுங் கேட்டுமிராத மண்டப ஒப்பனைகள், வியக்கத்தக்க திறமையான ஏற்பாடுகள் முதலிய பெருமிதங்களோடு திருமணம் இணையற்று விளங்கியது! உமையம்மையின் திருமணம் மற்று எவ்வாறிருக்கும்?

திருமண நிகழ்ச்சிக்கு ஒரு முடிசூட்டு விழாவைப்போல் நிகழ்ந்த அருமைப்பாடு ஒன்றும், இங்கே கருதுதற்குரியது. மணமக்களையும் வள்ளல் அழகப்பரவர்களையும் வாழ்த்திக் கொட்டையூர் நகரத்தார் ஒரு பாராட்டுக் கூட்டம் நடத்தியதே அது. செட்டிநாட்டரசர் அண்ணாமலை வள்ளலவர்கள் தலைமையில் அது நிகழ்ந்தது. மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் முதலிய பெருமக்கள் பலரும் ஒருங்கு குழுமியிருந்தனர். தலைமையுரையில் செட்டிநாட்டரசரவர்கள்,

'வள்ளல் அழகப்ப செட்டியாரவர்களைப் பாராட்டும் இக் கொண்டாட்டத்தில் நான் கலந்து கொள்வதைப் பெருமையாகக் கருதுகின்றேன். திருமண நிகழ்ச்சி ஒப்பற்றது; இவ்வளவு சிறப்பு வாய்ந்த ஒரு திருமணத்தை யாம் கண்டதுமில்லை! கேட்டதுமில்லை. இந்தத் திருமணம் தமிழிசை இயக்கத்திற்குப் போதரவாய் விளங்கியது. தெருவெல்லாம் தமிழ் முழக்கம். அழகப்ப செட்டியார் தாராள உள்ளம் வாய்ந்த வள்ளல். நாட்டு நன்மைகளுக்கான அறங்களை, நிலையாகப் பயன்தரும் வகைகளில், எண்ணிச் செய்துவருகிறார்கள். மக்களுக்குச் செல்வம் வருவதும் வறுமைநேர்வதும் இயற்கை. எது வரினும் உறுதியுடன், எடுத்த காரியத்தில் உழைப்பது சிறந்தபண்பு. அத்தகைய உழைப்பின் பயனாகக் கிடைத்த ஊதியத்தில் ஒரு பாகத்தை மனம் உவந்து ஈதல் அதனினும் சிறந்த பண்பாகும். 'அறம்' என்று கேட்குமுன்பே 'தந்தேன்' என்று வழங்குபவர் அழகப்ப செட்டியார். பல அறங்கள் செய்திருக்கின்றார்கள். இத்தகைய வள்ளலால் நம் இனத்தார்க்கும் பெருமை மிகுகின்றது; நாடு புகழடைகின்றது. இவர்களைப் பாராட்டுவது நமது கடமை. இவர்களும், மணமக்கள் உமையாளும் இராமநாதனும் எல்லா நலங்களும் மேன்மேலும் பெருகிப் பற்பல நற்காரியங்களைச் செய்துகொண்டு நீடூழி வாழ்ந்து விளங்கிவருமாறு இறைவனை வழுத்துகின்றேன்'

என்று அன்புடன் கூறி வாழ்த்தினார்கள். பின்பு மகாமகோபாத்தியாய முதுபெரும் புலவர் **பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள்**, காலத்துக்கும் இடத்துக்கும் தமது புலமைப் பாட்டுக்கும் ஏற்றபடி, உள்ளங் கவரும் அரிய சொற்பொழிவு ஒன்று நிகழ்த்தினார்கள்.

'இன்று, கொடைவள்ளல் கோட்டையூர் அழகப்ப செட்டியாரவர்களைப், பெருங்கொடை வள்ளலும் உலகம் புகழும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை நிறுவியவர்களுமான செட்டிநாட்டரசரவர்களே தமது வாயால் 'வள்ளல், வள்ளல்' என்று பன்முறை வாழ்த்திய பிறகு நான் என்ன சொல்ல இருக்கிறது? எனது புலமைத் திறத்தால் ஏதாவது கூறலாமென்றாலும், 'வள்ளல்' என்ற சொல்லில் எல்லாம் அடங்கிவிட்டதே.

'சிறந்தோன் ஒருவன் உலகிற் பெறவேண்டிய பேறு ஒன்று உண்டாயின், அது புகழேயாகும். கடமையைச் செய்துகொண்டு போவாரைப் புகழ் தானே தேடிவந்து அடையும். அழியும் ஊனுடம்பைக் கொண்டு, அழியாத புகழுடம்பைப் பெறுதலே மாண்பு.

'தொல்காப்பியத்தில் கல்வி, தறுகண், இசைமை, கொடை எனச் சொல்லப்பட்ட பெருமிதம் நான்கு. இந் நான்கு பெருமிதங்கட்கும் இலக்

கியமாக விளங்குபவர் வள்ளல் அழகப்ப செட்டியாரவர்கள். நம் நகரத்தார் களிலேயே முதல் எம். ஏ. இவர்கள்தாம்; அஞ்சாநெஞ்சம் படைத்தவர் களாதலால் தறுகண்மையும் உள்ளவர்கள். செல்வத்திற்கு 'வெறுக்கை' என்று ஒரு பெயர் உண்டு. நல்லோருக்குச் செல்வம் வந்ததும் அவர்கள் அதை நோக்கிச், 'செல்வமே, நீ ஓரிடத்திலும் நிலைப்பதில்லை; நீயாகப் போய்விடுவதற்குள் நானே உன்னை நிலைத்துநிற்கும் நற்காரியங்களுக்குப் பயன்படுத்தி விடுகிறேன்' என்று தம் கையை விட்டுத் தள்ளிவிடுகிறார்கள். ஓர் 'விழாத் திருவுருவம் போல் சுற்றிக்கொண் டிருக்கும் செல்வத்தை அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் என்னும் கருவறையில் அசையா திருக்கும்படி நிலைநிறுத்திவிட்டார்கள்.' ஈதல் இசைபட வாழ்த' லாதலால், இசைமைக்கும் அவர்கள் உரியவர்களானார்கள்.

'நம் இனத்தார்க்கு நாட்டுக்கோட்டை நகரத்தார் எனப்பெயர் வழங்கு கின்றது. காரணம் தெளிவாக விளங்கவில்லை. 'நாடு, கோட்டை, நகரம்' என்னும் மூன்றும் அரசர்க்கே உரியன; பிறர்க்கு இல்லை. ஆனால், செட்டி நாட்டரசரவர்களால் அந்தப் பெயர் நமக்கு உரிமையாயிற்று. அரசர்க்குரிய அம் மூன்றுள், நடுவாக உள்ளது கோட்டை. இப்போது கோட்டையூர், தக்கோரைப் பாராட்டும் சிறந்த நகரமாயிருக்கின்றது. சுற்றத்தாரால் ஒருவர் பாராட்டப் பெறுவது சிறந்த பெருமை. தேவர்கள் கூட ஒரு வரைத் தொழுவார்கள்; சுற்றத்தார் தொழுவது அருமை. இங்கே, சுற்றத் தார் ஒற்றுமையுடன் பாராட்டுதல் போற்றுதற்குரியது. ஒரு வள்ளலைப் பாராட்டுவதற்கு அவர்க்கு முன்பே வண்மையிற் பழகிய ஒருவர் தலைமை ஏற்பதும் மிகப் பொருத்தமாயிற்று.

'சிறந்த தந்தையைப் பெறுதல் ஓர் உயர்ந்த நற்பேறு. அத்தகைய பெரும் பேற்றைப் பெற்றிருக்கும் மணமக்களும், வள்ளல் அழகப்பரவர் களும், செட்டிநாட்டரசரவர்களும், கோட்டையூர் நகரத்தாரும் நீடினிது வாழ்கவெனத் திருவருளை இறைஞ்சுவன்.'

திரு. பண்டிதமணியவர்கள், இடையே தமிழிசை வளர்ச்சி களைப் பாராட்டி, மாறுபட்டோர் கருத்துக்களைக் கண்டித்து நன் முடிவுகளும் வழங்கினர்.

அடுத்துப் பல நிகழ்ச்சிகட்குப் பின், வள்ளல் அழகப்ப செட் டியாரவர்கள், தம்மையும் மணமக்களையும் பாராட்டிய அரு மைக்கு நன்றியுரை பின்வருமாறு வழங்கினார்கள்.

'தமிழில் பேசுவதென்றாலே எனக்கு அச்சம்; அதிலும், பண்டித மணி முதலியோர் பேசிய பின்பு நானும் பேசவேண்டியிருத்தலை நினைந்

றால், இந்த இடத்தை விட்டு எங்கேயாவது ஓடிப்போய்விடலாமா என்று தோன்றுகின்றது. இதனோடு செட்டிநாட்டரசரவர்கள் என்னை ' வள்ளல் ' எனப் பாராட்டிய அச்சமும் ஒன்றுசேர்ந்து விட்டது. பனிக்கட்டி தண்ணீரில் மிதக்கும்போது அதன், கால் பாகந்தான் வெளியில் தெரியும். அதைப்போல, செட்டிநாட்டரசரவர்கள் செய்துள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழகமாகிய பேரறம் வெளியே தெரிகின்றது. வெளியில் தெரியாமல் அவர்கள் செய்துள்ள அறங்கள் அதைப்போலப் பலமடங்கு மிகுதி. செட்டிநாட்டரசர் நம் நாட்டுக்கே ஒரு விளக்கு. அத்தகைய மாட்சியாளர் என்னை 'வள்ளல்' என்று மிகையாகக் கூறியிருப்பினும், அவர்கள் அளித்த அதனை ஒரு வாழ்த்தாக ஏற்று அவர்கட்கு நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். நான் ஒரு குட்டி வள்ளல். அரசரவர்கள் இமயமலையைப் போன்ற வள்ளலாராவார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக்கு இன்னும் வேண்டுமானாலும் தர எனக்கு விருப்பம். தமிழிசை வளர்ச்சிக்கு நம்மால் ஆவனவெல்லாம் செய்யவேண்டும். செட்டிநாட் டரசரவர்கள் தமிழுக்கும், தமிழிசைக்கும் அரும்பாடு பட்டு வருகிறார்கள். நான் மலையாள நாட்டில் தொழில் செய்பவனாதலால் அந் நாட்டிலுந் தமிழ் வளர்ச்சிக்கென ஒன்று உதவினேன். அந்தத் தொகையைப் பயன்படுத்துமிடத்துச், செட்டி நாட்டரசரவர்கள் பண்டிதமணியவர்கள் ஒத்தாசையையும் பெற்றுக்கொள்ளும்படி திருவனந்தபுரம் பல்கலைக் கழகத்திற்கு எழுத இருக்கிறேன். பண்டிதமணியவர்களைப் பற்றி நான் மிகுதியாகக் கேள்வியுற்றிருக்கிறேன். இன்று இவர்கள் சொற்களைக் கேட்ட பிறகுதான் தமிழில் இவ்வளவு கருத்துக்கள் இருப்பது எனக்குத் தெரிகிறது. பண்டிதமணியவர்களால் நம் இனத்துக்கே பெருமை. அவர்களைப் பேணி வருகின்ற நம் அரசரவர்களுக்கு நாம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்தப் பாராட்டுக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்த கொட்டையூர் நகரத்தார்க்கு என் சார்பாகவும் மணமக்கள் சார்பாகவும் நன்றியறிதலை அறிவித்துக் கொள்கின்றேன்.'

உமையாள்-இராமநாதன் திருமணம் இங்ஙனமெல்லாம் தமிழ் மொழி, தமிழிசை, தமிழ்ப் பெருமக்கள் பெருமையில் வந்து தாவி இனிது நிறைவேறியது. 'தமிழ் நாட்டுத் திருமணம்' என்னும் பெயர்க்கும் மிகப் பொருத்தமாயிற்று.

அறிஞர்க்குப் பட்டம் :—

திருத் தருமையாதீனத் தலைவரவர்களின் பத்தாண்டு ஆட்சி நிறைவின் சிறப்புவிழாக் காலத்தில், மொழி கலை

சமயம் முதலிய துறைகளில் தொண்டு செய்துவரும் அறிஞர் சிலர்க்குப் பட்டங்களும், பொற்பதக்கம் முதலியவைகளும் ஆதீனச் சார்பில் வழங்கப்பெற் றுள்ளன. ஆதீனத் தலைவரவர் களின் இந்த அருளிச்செயல் மிக்க மகிழ்ச்சி தருகின்றது.

தத்தங் கடமைகளைச் செய்துவரும் அறிஞர்களைப் போற்றிக் கொள்ளும் மேதகவு இதனாற் வெறப்படுகின்றது. ஊக்க மும் ஆக்கமும் நாட்டில் மேலுமேலுந் தழைத்து நலம் பல விளைதற்கு இஃது ஏதுவாகும். செய்வோர் தொண்டுகள், நாட் டில் நன்கு பரவுதற்கும் இது வாயில். பட்டம் பெற்றிருக்கும் அறிஞர்கள் தக்கோர்; அவர்கள் தத்தம் தொண்டுகளைச் சிறக்கச் செய்துகொண்டு, தருமைத் தலைவரவர்களின் தண்ணளி நினைந்து, மேன்மேலும் இத் தமிழ்ச் சைவ நன்னாட்டை உயர்த்தி வாழ் வித்துத் தாமும் விளங்கிவருகவென விரும்புகின்றோம்.

டாக்டர் இலட்சுமணசாமி முதலியார் :

சென்னைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராய்த் திகழும் திரு. முதலியாரவர்கள் சென்ற திங்கள் இறுதியில் சென்னை முத்தமிழ்ச் சங்கத்தின் திறப்புவிழா நிகழ்ச்சியில் தலைமை யேற்றுத், தமிழைப் பற்றிச் சில அரிய கருத்துக்களை அன்புடன் வெளியிட்டிருக்கிறார்கள். அவை வருமாறு :

'தமிழ்மொழி, காலத்துக்குக் காலம் வளர்ந்து வரும் புதிய கருத்துக்களையும் கலையுணர்வுகளையும் எளிதாகவும் விளக்கமாகவும் பேச்சினும் எழுத்தினும் வெளிப்படுத்தத் தக்கபடி இயங்கி வர வேண்டும். தமிழ் இலக்கியங்கள் மக்களிடையே நன்கு பரவ வேண்டும்; பிற திராவிட மொழிகளில் மொழிபெயர்க்கப் பெறு தலும் வேண்டும்.

'நம் நாட்டு இளைஞர்களிடம் தக்க அறிவாற்றலும் ஊக்க மும் முயற்சியும் நிரம்ப உள்ளன. இந்தியாவில் சுற்றுப் பய ணஞ் செய்த 'பீவர்லி நிக்கோலசு' (Beverly Nichols) போன்ற வெளிநாட்டார், இந் நாட்டு இளைஞர்களிடம் இவ்வியல்புகள் குறைவாயிருக்கின்றன என்று கருதுவது பொருந்தாது. நெருங்கிப் பழகுவோர், இவ் வியல்புகள் அவர்களிடம் நிரம்ப உள்ளதைக் கண்டுகொள்வர். மறைந்து தோன்றும் ஆற்றல்கள்

செயலுறுவதற்கேற்ற கால்களை அவர்கட்கு வழங்கிப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

'தமிழ்மொழி மிகவும் பழமையானது. பிறவற்றின் உதவி வேண்டாமல் தானே இயங்கும் ஆற்றலுடையது. தமிழ், இளைஞர்களின் உள்ளத்தைக் கவரும்படி சுவையான எளிய வடிவத்தைப் பெற வேண்டும். கல்லூரி மாணவர்கள் பிற பாடங்களை விரும்பி ஏற்றுக் கொள்கின்றனர்; தமிழில் தயக்கங் காட்டுவது வழக்கமாயிருக்கின்றது. தமிழ் வகுப்பிற் கவர்ச்சியில்லை. மாணவர்கள் உள்ளத்தில் சுவையூட்டுதற்கேற்ற இலக்கியங்களைத் தமிழிற் கொண்டுவருவது அதற்குத் தீர்வு தரும். தமிழ் நூல்களை அவற்றின் உயர்ந்த பழைய நிலையிலேயே வைத்திருப்பதில் பயனில்லை. பல்கலைக் கழகத்தின் தமிழாராய்ச்சித் துறையிலும், ஆங்கில நூலாசிரியர்களின் வரலாறுகளைப் போலத் தமிழ் நூலாசிரியர்களின் வரலாறு முதலியவற்றைச் சுவையான முறையிற், கொண்டுவரும்படி கேட்டிருக்கின்றேன். இந்திய மொழிகளுக்குப், பிறமொழிகளுக்குள்ள தகுதிகள் பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பெற்றுள்ளன.

'மொழி ஏனை எல்லாவற்றையும் போல வளர்ச்சியும் விரிவும் அடையவேண்டும். பழைய நிலையிலேயே மொழியைத் தனிப்படுத்தி விடுதல் ஆகாது. மனிதன் பலவற்றின் தொடர்பினால் வளர்ச்சியும் முற்போக்கும் அடைதலைப் போலத், தவிர்க்க முடியாத நிலையில் அமையும் இயற்கைத் தொடர்புகளோடு, மொழி விரிவடைதல் வேண்டும். அவ்வக்காலத்திலும் அது பயனுள்ள மொழியாகக் கையாளப்பெற்று வருதல் வேண்டும்.

'தமிழைப் பயில்வதோடு பிற மொழிகளையும் ஊக்கமுடையோர் பயிலுதல் நல்லது. ஆனால், கட்டாயப்படுத்திப் பிறமொழிகளைப் பயிலச் செய்வது நன்றாகாது. நாட்டில் தாய்மொழிக்கு வேறான பொதுமொழி யொன்று மக்களுள் ஒற்றுமையை உண்டுபண்ணும் என்னுங் கருத்தில் எனக்கு நம்பிக்கையில்லை. அக் கொள்கை உண்மையானால், வடநாடு ஒற்றுமையுடையதாய் இருக்கவேண்டும்; ஆனால் அப்படி இல்லை.

'புதிய முறையில் தமிழ்க்கு ஆக்கந் தேடும் வகையில், எல்லாரும் பண்பும் அமைதியுங்கொண்டு விளங்குதல் கட்டாயமாகும்.'

திரு. முதலியாரவர்கள், தமிழ் வளர்ச்சிக்குத் தக்க வழி வாயில்களை அறிவித்திருக்கின்றார்கள். அவை அத்தனையும் பொன்னுரைகளாயுள்ளன. இளைஞர்கள் இயல்பையும் இடையே குறித்துள்ளனர். தக்க நன் முயற்சிகள் பெருகியெழுந்து தமிழகம் முன்னணியில் திகழவும், சென்னை முத்தமிழ்ச் சங்கம் சிறந்தோங்கவும் திருவருள் உதவுக!

திரு. வி. க. மணி விழாவில் ஓர் அரிய நிகழ்ச்சி :

மணிவிழாக் கழகத்தினர் அமைத்த சில ஏற்பாடுகளுள், (Rt. Rev. M. Hollis, Lord Bishop of Madras.) சென்னைக் கிறித்தவத் தலைமைக் குரு ஆலிசு என்பாரைக் கொண்டு, 'கல்வியிலும் வாழ்க்கையிலுந் தாய்மொழி' என்னும் பொருள் மேல் ஓர் அரிய விரிவுரை நிகழ்வித்த அரிய நிகழ்ச்சி கருத்திருத்தற் பாலது. கவர்ச்சியும் பயனும் இது மிக விளைத்தது. மணிவிழாவில் நிகழ்ந்த இச் சொற்பொழிவு மணிப்பொழிவாய் விளங்கியது. சில கருத்துக்கள் வருமாறு :

'அயல் மொழிகளைக் கற்பதன் உண்மையான நோக்கம், எப்போதும் தம் தாய் மொழியைச் செழுமைப்படுத்துவதாகவே இருக்கவேண்டும். அயல்மொழிகளிற் பழகிய புதிய கருத்துக்களில் தேர்ந்து, தம் தாய் மொழிக்குப் பயன்படுகின்ற சிலர் வாயிலாகவே, நாட்டு மக்களின் கல்வி மேம்பாடடைகின்றது.

'கல்வி இருவகைப்படும். ஒன்று, எண்ணும் ஆற்றலைப் பெறுதல். இது முதன்மையாகவும் சிறப்பாகவும் கருதுவதற்குரியது. மற்றொன்று : அவ்வாற்றல் மேன்மேலும் வளர்வதற்கு அடிப்படையாகத், தேவையான, கருத்துக்களைத் தொகுத்துக் கொள்ளுதல்.

'கல்வியின் தொடக்கம், தாய்மொழியில் இருக்கவேண்டும். அதற்கு ஏற்றபடி தாய்மொழிக் கல்வி விரைந்து வளர்ச்சிபெற வேண்டும். இது, எண்ணும் ஆற்றலை மக்களுக்கு நன்றாக உதவும். இதனால், புதிய ஆய்வுகள் கண்டுபிடிக்கப்பெறும்.

'கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் மாணவர்கள், இன்னும் கருத்துக்களைத் தொகுக்கவே மிகுதியாக முயல்கின்றனர்; புதிய

புதிய வகையாக எண்ணும் ஆற்றலைப் பெறுதல் குறைவாகவே இருக்கின்றது. அதற்குக் காரணம், மிக இளமையிலிருந்தே ஏதாவதொரு மொழியை அரைகுறை யறிவாகப் பழகி, அம் மொழியிற் கற்கும் கருத்துக்களை, எண்ணும் ஆற்றலில் கையாளத் தெரியாமையேயாகும். அவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களின் நிலையும் பெரும்பாலும் இங்ஙனமே உள்ளது. இந் நாட்டில் இப்போதுள்ள கல்விமுறையில் தேர்ந்த, பெருங்கல்வியாளர் இல்லாமலில்லை. ஆனால், பயன்படத்தக்க நிலையில் அவர் மிகச் சிலராவர்.

'இந் நாட்டில், படித்த மக்களுக்கு உண்மையான அடையாளம் ஆங்கிலத்திற் பேசுவதன்று. எல்லாவற்றிற்கும் முதலாக, அவர்கள் நல்ல தமிழிற் பேசுவதேயாகும். இப்படிச் சொல்வதனால், மக்கள் தம் தாய்மொழிக்கு வேறாக ஒரு மொழியையோ அல்லது பல மொழிகளையோ கற்றுக்கொள்வதற்கு மாறு கூறியதாக ஆகாது. அறிந்த அனைத்தையும் தமக்கு உரிமையான மொழியில் அழகாக வெளியிடத்தகுந்த திறமை இருக்கவேண்டுமென்பதே கருத்து. கற்று வல்லோரும் ஆராய்ச்சியாளரும் இந் நாட்டில் ஆங்கிலத்திலன்றித் தம் தாய்மொழியில் கருத்துக்களை வெளிப்படுத்திப் பழகாமையினால், அவர்களும் பிறரும் இயல்பாகக் கையாளும் அளவுக்குத் தாய்மொழியானது போதிய வளர்ச்சி பெறுமற் போகின்றது. கலைகளும் இலக்கியங்களும் இக் கேட்டினால் இடர்ப்படுகின்றன.

'நாட்டின் கல்வி முன்னேற்றத்திற்கு, நாட்டின் தாய்மொழிப் புலவர்களே திறவுகோல். ஆனால் இந்தியாவில் இக் காலக் கல்வி முறையில் அவர்கள் புறக்கணிக்கப்படுகின்றார்கள். அது கூடாது; அப் புலவர்களைப் புதிய அறிவு முறையிலும், பல்வேறு துறைகளில் அமைந்த புதிய ஆராய்ச்சிகளிலும் சிறக்குமாறு செய்து, நாடு தன்னை விளக்கிக்கொள்ளவேண்டும். நாடு அவர்களை வெறும் மொழிப் புலவர்களாக வைத்துச், சிறுவர்களின் பள்ளித் தேர்வுகளுக்குரிய பாட நூல்கள்போல்வன எழுதிக்கொண்டிருக்குமாறு விட்டுவிடுதல் நன்றாகாது. வளர்ச்சிக்குரிய எதிர்கால உலகத்திற்குத் தேவையானபடி, கருத்திலும் வாழ்க்கையிலும் மக்களுக்கு உதவும் வகையில் அவர்கள் விளங்கு

யிருக்கவேண்டும். ஆடவர்க்கும் மகளிர்க்கும் இன்றியமை யாத எல்லாத் துறைகளிலும் தகுதி வாய்ந்த நூல்களைத் தம் தாய் மொழியில் எழுதியுதவுதற்கு அறிஞர்கள் தம்மைத் தகுதியுடைய வர்களாகச் செய்துகொள்ளுதல் கட்டாயமாகும். கலைகளைத் தாய்மொழியிலன்றி ஆங்கிலத்திற் பயில்வதையும், எண்ணங் களைத் தாய்மொழியில் எண்ணுவதும் வெளிப்படுத்துவதும் இடராயிருக்கின்றன என்று கூறித் தப்பிக் கொள்வதையும் தமக்கு ஒரு சிறப்பாகக் கருதி வீண்பெருமை கொள்வதிலிருந் தும் அவர்கள் நீங்கிக்கொள்ள வேண்டும்.'

குரு ஆலிசு அளித்திருக்கின்ற இக் கருத்துக்களுக்கும், அவை கிடைக்குமாறு செய்த மணி விழாக் கழகத்தினர்க்கும் தமிழ் நாடு நன்றி மிக்கதாயிருக்கும். திரு. வி. க. அவர்கள் மணிவிழா நிகழ்ச்சியில் இச்சிறந்த சொற்பொழிவு, வரலாற்றுத் தொடர்புடையதாய் நிலைபெற்று மிளிரும் மாட்சியுடையது. தமிழன்னையின் திருவோலக்க நாள் அண்மையிலேயே உள்ளது.

தாய்மொழிக் கீர்த்தனை

இராகம், காகரப்பிரியா] தாளம், ஆதி.

பல்லவி

ஒருவரையுங் குறை கூறாதே—உலகில்
உண்மை வழிநிலை மாறாதே நெஞ்சே (ஒருவ)

துணைப் பல்லவி

மருளும் மனத்தினில் மாசுதனை யகற்றி
திருவும்நல் வாய்மையும் திறமுட னேபெற (ஒருவ)

சரணம்

பொய்களை மெய்யெனப் புரட்டிப்பே சாதே
பொறுமையை யிழந்துநீ புலம்பிவா டாதே
உய்வகைக ளறியா உளம்நிலை யாதே
உயர்வுதாழ்வு பேசி உடல்வளர்க் காதே. (ஒருவ)

கண்டதே காட்சியாய்க் கருத்திற்கொள் ளாதே
காலநிலைக் கேற்பக் கோலங்கொள் ளாதே
கண்டவர் புகழ்வதில் காதல்கொள் ளாதே
கடமையை மறந்துநீ களிப்படை யாதே. (ஒருவ)

—இசையரசு. தண்டபாணி தேசிகர்.

சீவக சிந்தாமணி

[பண்டிதமணி]

ஒரு மொழியின் பெருமையை அறிந்துகொள்ளுதற்குக் கருவி அம் மொழிக்கண் அமைந்த சிறந்த இலக்கியங்களே ஆகும். இலக்கியங்கள் மதிநுட்பமும் மொழிப்பயிற்சியும் நிரம்பப் பெற்றுப் புலமை கைவரப்பெற்ருேரால் புற வுலகத்தினும் அக வுலகத்தினும் நுனித்துணர்ந்து நுகர்ந்த பல பொருளுண்மைகளைச் சுவைமிக்க செய்யுட்களானும் உரை நடையானும் புலப்படுத்தி இயற்றப்படுவனவாம். செய்யுள்நடையில் அமையும் இலக்கியங்களையே நம் முன்னையோர் பெரிதும் கையாண்டனர். விரிந்த பொருள்களைச் சுருங்கிய சொற்களிலடக்கி, வெளிப்படையாகவும் குறிப்பாகவும் பொருள் புலப்படுத்தி, ஓசை நயத்துடன் கற்பார்க்கு இனிமை பயத்தலானும், கற்றவர் நினைவிலிருத்திக் கொள்ளுதற்கேற்ற இயல்புண்மையானும் செய்யுளிலக்கியங்கள் பெரும்பாலும் தழுவப்பட்டன. செய்யுள்நடைபோல் பொருட் செறிவுள்ள இயல்நூலாகிய இறையனர் களவியல் போன்ற உரைநடையிலமைந்த இலக்கியங்கள் மிகச் சிலவே. தமிழிற் செய்யுள்நடையில் அகப்பொருளும் புறப்பொருளும் பற்றிச் சங்ககாலத் தெழுந்த நூல்கள் பலவுள. அவற்றுட் பெரும்பாலன தனிச் செய்யுட்களாகவே உள்ளன. அகப்பொருளின்பப் பகுதியாகிய ஆடவர் மகளிர் காதலைப்பற்றியும், புறப்பொருள்—அறமும் பொருளும் எனினும்—பெரும்பாலும் பொருட்குக் காரணமாகிய வீரத்தைப் பற்றியும் கூறுவன. இவ்விருதிறத்துப் பொருள்களையும் ஒருங்கமைத்து நிகழ்ந்தனவும் நிகழாதனவும் இவ்விரண்டும் கலந்தனவுமாக ஒரு வரலாறு தழுவித் தொடர்நிலைச் செய்யுளாகப் பாடப்படுவது காப்பியமாகும்.

காப்பியத்தைத் தொடர்நிலைச் செய்யுளென்று தமிழறிஞர் கூறுவர். காப்பிய இலக்கணங்கள் முற்றும் நிரம்பப் பெற்று அழகிய இனிய சுவைமிக்க பல செய்யுட்களாற் பாடப்பட்ட தமிழ்ப் பெருங்காப்பியங்கள் ஐந்தென ஒருகாலத்து எண்ணப்

[மகாமகோபாத்தியாயர் முதுபெரும் புலவர் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்களால் 12-2-43-ல் திருச்சி வானொலியிற் சொற்பொழிவு செய்யப்பட்டது.]

பட்டன. அவை **சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையா பதி, குண்டலகேசி** என்பனவாம். இவற்றுள் முன்னையமூன்றும் அச்சின் வாயிலாக வெளிப்பட்டன. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் காலத்தான் முற்பட்டனவாயினும், இனிய ஓசைநயம் வாய்ந்த செய்யுட்களாக முதலிற் பாடப்பட்டதாதலின் சீவகசிந்தாமணி, எண்ணுமுறையில் முதலிடம் பெற்றது. இச் சிந்தாமணிப் பாடல்களைப் பாவினம் என்று கூறலாகாதென்றும் "கொச்சகம்" என்னும் கலிப்பாவாகவே கொள்ள வேண்டும் என்றும் நச்சினார்க்கினியர் கூறுவர்.

சீவகசிந்தாமணி என்னும் இப் பெருங்காப்பியம் பத்துப் பாட்டு எட்டுத் தொகை முதலிய முதிர்ந்த செய்யுள் நடையாலாகிய சங்கநூல்களுக்குப் பின்னரும், பெரியபுராணம் கம்பராமாயணம் முதலிய அழகிய காப்பியங்களுக்கு முன்னரும் ஆகிய இடைக் காலத்துத் தோன்றியது. இதனால் இச் சிந்தாமணி சொன்னடையாலும் பொருணயத்தாலும் சிறப்புற்று விளங்குவதொன்று. இதனை இயற்றிய ஆசிரியர் **திருத்தக்க தேவர்** என்னும் பெயருடையார். இவர் சோழர் குலத்திற்றோன்றிச் சிறு பருவத்தே ஆருகத சமயத்தைத் தழுவிய துறவற நெறியுடையார் என்று கூறுவர். இன்பச் சுவையையே பெரும்பாலுந் தழுவிய இச் சிந்தாமணிப் பெருங்காப்பியத்தை இவர் பாடுதற்கு முன்னர் இவர் உள்ள நிலையை அறிதற்பொருட்டு இவருடைய ஆசிரியர் எதிரே ஓடிய ஒரு நரியின் செயலைப் பற்றிப் பாடக் கட்டளையிட்டனரென்றும், அங்ஙனமே **நரிவிருத்தம்** என்னும் நூலை நிலையாமை முதலிய உயர்பொருள் தோன்றப் பாடிமுடித்தனர் என்றும், அதுகண்டு இன்பம் நுதலிய காப்பியம் பாடுதலால் இவர் ஒழுக்கம் மாறுபடாதென்று துணிந்து இந்நூலை இயற்றுவதற்கு ஆசிரியர் உடன்பட்டு ஊக்கம் உறுத்தினர் என்றுங் கூறுவர். வடமொழியில் வான்மீகம் போலப் பெருங்காப்பியங்களின் அமைப்பிற்கு இஃது எடுத்துக் காட்டாக விளங்குவதாகும்.

இந்நூல் பதின்மூன்று இலம்பகங்களாக வகுக்கப்பட்டு மூவாயிரத்துக்கு மேற்பட்ட செய்யுட்களாலாயது. இக்காப்பியத்

தலைவன் ஏமாங்கத நாட்டில் இராசமாபுரத்தில் செங்கோல் செலுத்திய சச்சந்தன் என்னும் அரசனுடைய புதல்வன் சீவகன் ஆவான். இவன் பிறத்தற்கு முன்னர் இவன் தந்தை சச்சந்தன் என்பான், தன் காதற்கிசைந்த கற்பரசியாகிய விசயை யென்பாளை மணந்து அவள் காதலின்பத்தில் ஈடுபட்டு அவ்வின்பத்தை ஒழிவின்றி நுகர்தற்கு அரசியல் தடையெனக் கண்டு அவ்வரசைக் கட்டியங்காரன் என்னும் அமைச்சன்பாற் கொடுத்து அரண்மனையில் ஒருபால் தேவியுடன் இன்பம் நுகர்ந்திருந்தான். ஓராண்டு கழிதற்கு முன்னரே கட்டியங்காரன் அரசியல் வேட்கையுற்றுப் படைவீரரைத் தன்வயப்படுத்தி அரசனைக் கொல்ல முற்பட்டான். இந்நிலையறிந்து "உரிமைமுன் போக்கியல்லால் ஒளிர்முடி மன்னர் போகார்" என்றதற்கேற்பக் கருவுற்றுத் திங்கணிறைந்த காதலியை மயிற்பொறியிலேற்றிப் புறம்போக்கி அமைச்சனோடு போர்செய்து இறந்தான்.

அரிதிற் பிரிந்து மயிற்பொறியிற் சென்ற விசயை நகர்ப்புறத்தையடைந்ததும் பகைவர் வெற்றிமுரசொலி கேட்டுச் சோர்ந்து பொறியியக்குங் கை நழுவ ஆங்குள்ள சுடலைக்கண் வீழ்ந்தாள். வீழ்ந்த அவ்விடத்தே அழகிய ஓர் ஆண்குழந்தையைப் பெற்றுப் பாதுகாக்க வகையின்றி வருந்திக்கொண்டிருக்குங்கால் அவள் உயிர்த் தோழி வடிவுகொண்டு வந்த ஒரு பெண் தெய்வம் தேற்ற ஆறுதல் எய்தி, அத்தெய்வம் சொல்லியபடி ஆங்குள்ள மரச்செறிவில் மறைந்துநின்றாள். அப்பொழுது அன்று பிறந்திறந்த தன் குழந்தையைப் புதைக்க ஆங்கு வந்த கந்துக்கடன் என்னும் பெரும்பொருள் வாணிகன் "ஒழுக்கியல் அருந்தவத்து உடம்பு நீங்கினார், அழிப்பரும் பொன்னுடம்பு அடைந்தது ஒப்ப" இறந்த தன் புதல்வன் உடலை ஆங்கிட்டு அருமருந்தன்ன விசயை புதல்வனைக் கொண்டு தன் மனை சென்று வருந்திய தன் இல்லாளை நோக்கி "நின்மகன் சாதலின்றும் தப்பினான்" என்று கொடுப்ப அவள் ஏற்று உவகை எய்தினாள். அவ்வாணிகன் அக்குழந்தையைத் தொட்டெடுத்த போது அது தும்மிற்றாகத் தெய்வம் "சீவ" என்று வாழ்த்தியதால் அக்குழந்தைக்குச் "சீவகன்" என்று பெயரிட்டு வளர்த்து வருவாராயினர்.

இங்ஙனம் சீவகன் வசுதேவன் புதல்வனாகிய கண்ணன் நந்தகோன் மனையில் வளர்ந்ததுபோல வளர்ந்து வருவானாயினன். பின்னர் அவன் எல்லாக் கலைகளிலும் வல்லனாய்க் காந்தருவதத்தை முதலிய பெண்கள் எண்மரை மணந்தும், தன் தந்தையின் பகைவனாகிய கட்டியங்காரனாற் சிறைப்படுத்தப்பட்டும், நண்பனாகிய தேவனொருவனால் விடுதிபெற்றும், பல அரிய துணைவர்களால் தன்னுடைய நற்றாயின் தவச்சாலை யெய்தி அவள் அன்பிற்குப் பாத்திரமாகியும், மீண்டும் அப் பகைவனை அழித்துப் பழைய அரசியலைக் கைப்பற்றியும், நாட்டுவளம் பெருக்கி நங்கைமாரோடும் புதல்வரோடும் நல்வாழ்க்கையிற் றலைப்பட்டும், இறுதியில் நிலையாமை உணர்ந்து பற்றொழிந்து மூவுலகுச்சியின் பக் கடலாகிய பரிநிர்வாணம் எய்தினன் என்ப. இஃது இக் கதா நாயகனாகிய சீவகன் வரலாற்றுச் சுருக்கமாகும்.

இனி இப்பெருங்காப்பியம் சீவகனைப் பற்றிய வரலாறு கூறுதலானும், சிந்தித்த பொருள் எல்லாவற்றையும் தரும் இயல்பினதாகலானும் 'சீவக சிந்தாமணி' என்னும் பெயருடையதாயிற்றென்ப. இன்னும் இதற்கு "மண நூல்" என்ற பெயரும் உண்டென்று கூறுவர்.

சீவகன் காந்தருவதத்தை முதலிய மகளிர் எண்மரை மணஞ்செய்துகொண்ட பகுதிகள் அவ்வப் பெண்கள் பெயரால் 'காந்தருவதத்தையார் இலம்பகம்' என்பது முதலியவாகக் கூறப்பட்டுள்ளன. அவை, 3. 4. 5. 6. 7. 8. 9. 12. பகுதிகளாகிய இலம்பகம் எட்டுமாம். ஏனைய ஐந்து இலம்பகங்களுள் முதலாவது நாமகளிலம்பகம் ஆகும். அப்பகுதியில் சீவகன் கலைகளிற் சிறந்த பயிற்சி பெற்றானென்பது முக்கியமான செய்தியாகும். அதனால் நாமகளை மணந்தான் எனக் கொண்டு அதுவும் ஒரு மணப் பகுதி யாகுமென்று நூலாசிரியர் குறிப்பிடுகின்றார்; "குழைமுக ஞானமென்னும் குமரியைப் புணர்க்கலுற்றார்" எனவும், "இருந்து பொன்னோலை செம்பொன் ஊசியில் எழுதி ஏற்பத், திருந்துபொற் கண்ணியாற்குச் செல்வியைச் சேர்த்தினாரே" எனவும், "நாமகள் நலத்தை யெல்லாம் நயந்துடன் பருகி" எனவும் கூறிய செய்யுட் பகுதிகள் இதற்குச் சான்றாகும்.

இரண்டாவது இலம்பகத்தில் சீவகன் தன் தோழனுன பதுமுகனுக்கு நந்தகோன்மகள் கோவிந்தையை மணஞ் செய்வித்தமையால் அதுவும் மணப்பகுதியாயிற்று. பத்தாம் இலம்பகத்தில் பகைவென்று அரசியலைக் கைப்பற்றிய செய்தி கூறப்படுதலின் 'மண்மகளை மணந்தான்' என்ப. இதனைப் "பணைமுகப் பைம்பொன் மாலைப் பாசிழைப் பூமிதேவி, இணைமுலை யேகமாக நுகரிய எய்தினுனே" என்பதனுலறியலாம். பதிஞேராம் இலம்பகம் பூமகளிலம்பகம் ஆகும்; அதன்கண் அரசு கைப்பற்றி நிலவுலகத்தை ஆட்சி புரிந்த செய்தி கூறப்படுதலின் "பூமகளை மணந்தான்" என்ப. "குடையோங்கிப், பரவைமாநிலம் அளித்தது களிக்கயன் மழைக்கட், பொருவில் பூமகட் புணர்ந்தனன்" என்பதனுல் அறியலாம். இறுதி இலம்பகம் முத்திமகளிலம்பகமாகும். முத்தியென்னும் வடசொல் வடமொழியிற் பெண்பாற்சொல்லாதலின் "முத்தி மகள்" என்ருர். சீவகன் பற்றறத் துறந்து வீட்டுலகம் எய்திய செய்தியைக் கூறுதலின் முத்திமகளை மணந்தான் என்ப; இதனைக் "கேவலமடந்தை யென்னும் கேழ்கிளர் நெடிய வாட்கண் பூவலர்முல்லைக் கண்ணிப் பொன்னெருு பாகமாக....இன்பக்கடலினுள் மூழ்கினுனே" என்பதனுனும், "பிரிதலும் பிணியும் மூப்பும் சாதலும் பிறப்புமில்லா, அரிவையைப் புல்லி....உறையுமன்றே" என்பதனுனும் அறியலாம். சீவகனுக்கு இறுதியில் வாய்த்த பெண்மகள் பிறப்பிறப்பும் பிணிமூப்பும் இல்லாதவளாயினுளென்று கவிகூறிய செய்தி இன்புறத் தக்கதொன்று. இங்ஙனமெல்லாம் மணப் பகுதிகளாக அமைந்தமையின் இதனை 'மணநூல்' என்று வழங்குவாராயினர்.

இனி, இப் பெருங்காப்பியத்தில் உண்மைக் காதலின் இயல்பையும் வீரத்தின் இயல்பையும் விளங்கக் காணலாம். இன்பம் அவலம் முதலிய சுவைகளைத் தக்க இடத்திற் புலப்படுத்தியிருக்கும் அழகு பாராட்டத்தக்கது. அம்முறையே, பிற்காலக் கவிகளுக்கு வழிகாட்டியாக அமைந்ததெனலாம். அமைச்சரைப் பல்லாற்ருனும் சோதித்துத் தெளிந்தபின்னரே நம்பவேண்டும் என்பது முதலிய அரசியலமைப்புக்களும், அன்பு, அருள், நன்றி மறவாமை முதலிய குணங்களால் விளையும் நன்மைகளும், பிறர்க்

கின்னா செய்தார் விரைந்து கெடுவர் என்பது முதலிய நீதிகளும் பிறவும் இதன்கண் தெளிவுற விளக்கப்பட்டுள்ளன. இக் காப்பியத் தலைவனாகிய சீவகன் உயர்ந்த குணஞ் செயல்களை உடையவனாக வருணிக்கப்பட்டுள்ளான்.

இவன்பாலமைந்த நற்குண நற்செயல்களைக் கவி பகைவன் நாவில் வைத்து, “அருள் வலி ஆண்மை கல்வி அழகு அறிவு இளமை ஊக்கம் திருமலி ஈகை போகம் திண்புகழ் நண்பு சுற்றம் ஒருவரிவ்வுலகில் யாரே சீவகன் ஒக்கு நீரார்” என்று பாராட்டியுள்ளார். அருள்முதற் சுற்றமுடைமையீறாகப் பதின்மூன்று குணங்கள், நன்குணர்ந்த பகைவனாகிய கட்டியங்காரன் முகமாக வெளிப்பட்டுள்ளன வென்றால், இவன் தன்னிகரில்லாத் தலைமகன் என்பது புலனாகுமன்றோ? அருள் வலி என்னும் குணங்களுள், ஒன்று மிக்கவிடத்தில் மற்றொன்று நிற்றலரிதாகும். சீவகன் அருணிறைந்த கொடைக்குணமும் அளவிகந்த உடல் வலியும் படைத்தவனென்று அவ்விரண்டு குணங்களின் பயன்களை நேரிற் கண்டோர் கூற்றாகக் கவி ஒரு சந்தர்ப்பத்தில் எடுத்துரைக்கின்றார். “கொடையுளும் ஒருவன் கொல்லும் கூற்றினும் கொடிய வாட்போர்ப் படையுளும் ஒருவனென்று பயங்கெழு பனுவனுண்ணூல் நடையுளார் சொல்லிற் றெல்லாம் நம்பி சீவகன்பாற் கண்டாம்” என்பது அப் பகுதியாகும். பாரதத்தை உணர்ந்தோர் கொடைக்குக் கன்னனையும் படைக்கு அருச்சுனனையும் எடுத்துக் காட்டுவர். இங்கே இவ்விரண்டும் நம்பி சீவவன்பாற் காணப்பட்டனவாம். தான் பிறந்த நகரத்துள்ள ஆயர்களின் பசுக்கூட்டங்களைப் பக்கத்துள்ள வேடர்கள் கவர்ந்து சென்றனராக அப்பொழுது அரசுவீற்றிருந்த கட்டியங்காரன் ஆனிரைகளை மீட்க வியலாத நிலையில் சீவக குமரன் சென்று அவ் வேடர்களை அச்சுறுத்தி ஓட்டி ஆனிரைகளை மீட்ட நிகழ்ச்சியை அறிந்தோர் இங்ஙனம் பாராட்டுவாராயினர். எளிதிற் கொல்லத்தக்க வேடர்களின் உயிரை அவர்களுக்கும் ஆனிரைகளை ஆயர்களுக்கும் வழங்கியதாலும் கொடிய அவ்வேடர்களை ஒறுத்தடக்கியதாலும் கொடைத்திறனும் படைத்திறனும் ஒருங்கு வாய்ந்தவனென்று பாராட்டப்பட்டான். இது கண்ணிப் போராகும். இக்குணங்கள் மிக்கு வெளிப்பட்ட இடத்

கள் இன்னும் பலவுள ; அவை அவ்வப்பகுதியில் தெளிவுறுத்தப் படும்.

கவிச்சுவை ஒன்பதனுள் இன்பச் சுவையே சிறந்ததென்ப. திருக்குறளின் உரையிற் பரிமேலழகர் "இச் சிறப்புப் பற்றி வட நூலுட் போசராசனும் சுவை பலவென்று கூறுவார் கூறுக ; யாம் கூறுவது இன்பச் சுவை ஒன்றனையுமே என இதனையே மிகுத்துக் கூறினான்" என்பர். அச் சுவையையே பெரிதும் நுதலியது இப் பெருங்காப்பியம். இன்பம் உவகை சிருங்காரம் என்பன ஒரு பொருளனவாம். அது தோன்றுதற்குரிய நிலைக்களம் "செல்வம் புலனே புணர்வு விளையாட்டென்று அல்லல் நீத்த வுவகை நான்கே" என்ற விதிப்படி, செல்வ நுகர்ச்சியும் கல்வியறிவும் காதலின்பமும் நீர்விளையாட்டு முதலியனவும் ஆம். சீவக குமாரன் அரசகுமாரனாய்ச், சிறந்த பெரும்பொருளாள னாகிய கந்துகன் மனையில் வளர்ந்ததனாலும், பகைவென்று அரசி யற் செல்வத்தை யடைந்து மனைவியர் மக்களுடன் வாழ்ந்ததனா லும் செல்வ நுகர்ச்சி புலனாகும். கல்விப் பயிற்சியிற் சிறந்தவ னென்பதை "நாமகள் நலத்தை யெல்லாம் நயந்துடன் பருகி" என்பதனான் அறியலாம். சிறந்த இலக்கியங்களையும் படைக் கலத் தொழில் முதலிய கலைகளையும் இசைக் கலைகளையும் மறு மைக்குரிய தத்துவ நூல்களையும் நன்கு கற்றவன் என்பதும் யாழ்வாசிப்பதிற் சிறந்த நிபுணன் என்பதும் வரலாற்றுப் பகுதி களாலறியலாம். காந்தருவதத்தை யென்பாளோடு நடத்திய யாழ்ப் போரில் வெற்றியடைந்தது இங்கே கருதத் தக்கது. சமய நூலுணர்ச்சியும் பிறர்க்குத் தெளிவுறப் போதிக்கும் ஆற்ற லும் மிகப்படைத்தவன் என்பதற்குப் பற்பல சான்றுகள் உள் ளன. சீவகன் வழியெதிர்ப்பட்டான் ஒருவன் வினவிய வினாக் களுக்கு விடையிறுக்கு முகமாக "என் மனைவியரும் நால்வர் மக்கள் ஒவ்வாதார்தாமில்லை ஒப்பான் ஒரு மகனே நால்வர் ஒரு வயிற்றுப் பிறந்தான்" என விடை கூறினான். இவ்விடையில் நான்கு மனைவியரிடத்தினின்றும் ஒரு நன்மகன் பிறந்தான் என்று கூறக்கேட்ட அவ் வழிச் செல்வோன் நகைத்து "மனைவி யர் நால்வரிடத்தினின்றும் ஒரு மகன் பிறத்தல் எப்படிப் பொருந் தும்" என்று கேட்கச், சீவகன் கூறிய விடை பாராட்டத் தக்கது.

"நற்றானஞ் சீலம் நடுக்காத் தவமறிவர் சிறப்பிந் நான்கும்
மற்றாங்குச் சொன்ன மனைவியரிந் நால்வரவர் வயிற்றுட் டோன்றி
யுற்றான் ஒருமகனே மேற்கதிக்குக் கொண்டுபோ முரவோன் றன்னைப்
பெற்றார் மகப்பெற்றார் அல்லாதார் பிறர்மக்கள் பிறரே கண்டீர்."

இச் செய்யுளால் தானம் சீலம் தவம் இறைவர்பூசனை ஆகிய இந் நான்கும் மனைவியர் என்பதும் இந்நால்வர் வயிற்றினும் பிறந்து பயன்றருவான் நல்வினையாகிய மகன் ஒருவனே என்பதும், இப் புண்ணிய குமரனைப் பெற்றாரே நன்மகப் பேறுடையார் என்பதும் புலனும்.

இனிக் காதலின்பமும் நீர்விளையாட்டு முதலிய மகிழ்ச்சியும் இக் காப்பியத் தலைவன்பாற் பெருக்கமாகக் காணலாம். மகளிர் எண்மரை மணந்து அன்னாரோடு நுகர்ந்த இன்பங்களே இவ் வுவகை நிலைக்களங்களுக்குப் போதியனவாகும். கேமசரி என்னும் ஒரு பெண்மகள் இல்லத்திற்கு அவள் தந்தையால் அழைக்கப்பட்டுச் சென்ற சீவகன் அப் பெண்மணியின் காதனோக்கம் தனக்குப் புலப்பட்ட முறையைக் கூறுமுகமாக எழுந்த செய்யுள் சுவைத்துணர்ந்து இன்புறத்தக்கது;

காதன்மை கண்ணுளே யடக்கிக் கண்ணெனும்
தூதினாற் றுணிபொருள் உணர்த்தித் தான்றமர்க்கு
ஏதின்மை படக்கரந் திட்ட வாட்கணேக்
கோதநீ ரமுதமும் உலகும் விற்குமே.

என்பது அப் பாடலாகும்.

அந் நங்கையர் திலகம் சீவகனுடைய அழகுமிக்க தோற்றப் பொலிவில் ஈடுபட்டுத் தன்னுள்ளத் தெழுந்த காதற்பெருக்கை ஏனையோர், அறியாவாறும், சீவகன் மாத்திரம் அறிந்து கொள்ளவும் எங்ஙனம் புலப்படுத்தாள் என்பதை இச் செய்யுள் சுவைபடத் தெளிவுறுத்துகின்றது. அவள் தன் அளவிகந்த காதலையெல்லாம் தன் கண்ணுளே அடக்கினாளாம்; உள்ளத்தே தோன்றி மிக்கதால் இடம் பெறாமல் வெளிப்படுதற்கு வாயிலாகிய கண்ணில் அடக்க நேர்ந்தது. பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் ஆதலின் கண்ணிடனுதல் பொருத்தமே. இத் துணைக் காதல் நிறைவுடையேன், என்னை மணந்து கோடல்

வேண்டும் என்று தான் றுணிந்த பொருளை அக்கண்ணாகிய தூதினால் சீவகனுக்கு உணர்த்தினாளாம். ஆகவே அவன்பாற் சென்ற கடைக்கண்ணோக்கம் அவள் உண்மைக் கருத்தைப் புலப்படுத்தி அவனைத் தன்வயப்படுத்தியதென்பது புலனாம். இங்ஙனம் இருமுதுகுரவர் முதலிய உறவினர் சூழவிருந்த நிலையில் இவள் தன் காதற் பார்வையை அவன்பால் செலுத்தினாளென்றால் அஃது அவர்க்குப் புலப்படாதோ எனின் அது குறித்தே "தான் தமர்க்கு ஏதின்மைபடக் கரந்திட்ட வாட்கணோக்கு" என்று கூறப்பட்டது. இவள் கட்பார்வை சுற்றத்தார் அயன்மையென்று கருதும்படி சீவகன்பால் மறைவிற் செலுத்தப்பட்டதாம். தனக்கு மாத்திரம் உண்மையைப் புலப்படுத்திப் பிறரறியாவாறு மறைக்கப்பட்ட அவள் நோக்கின்திறமையை வியந்து சீவகன் இந்நோக்கம் பாற்கடலிற் றோன்றிய அமிழ்தத்தையும் உலகையும் தனக்கு விலையாக விற்கும் என்று கருதுவானாயினான். உவகைச் சுவையில் "விப்பிரலம்பம்" என்று வடநூலிற் கூறப்படும் காதலர் பிரிவிரக்கம் இந்நூலிற் பலவிடங்களிற் சுவைநலந் தோன்றக் கூறப்பட்டுள்ளது. இஃது அவலச்சுவைபோற் காணப்படினும் முடிவில் இன்பத்தில் நிலையுறுதலின் உவகையென்றே கொள்ளல் வேண்டும்; இதனையே உவகையிற் சிறந்த கூறாகக் கவிகள் மேற்கொண்டனர்.

இதுகாறும் கூறியவாற்றால் காப்பிய இலக்கணங்களெல்லாம் நிரம்பப் பெற்றுப் பயில்வார்க்குப் பல்வகைச் சுவைகளாலும் அறிவின்ப விருந்தளித்து மகிழ்வுறுத்துவது இச் சீவக சிந்தாமணி என்பது போதரும்.

இறைவன்

உலகை யாக்குங் கடவுளவன்
　　ஊட்டுங் கடவு ளவன்அருளால்
அலகில் விளையாட் டியற்றியெலாம்
　　அளிக்குங் கடவு ளவன்நாளும்
இலகு கதிராய் மதியமாய்
　　இயங்கு நிலநீர் வளியாகித்
துலங்கு தீயாய் வெளியான
　　தூய வொருவன் அவன்அன்றே! (1)

—கிளிக்காட்டு இறையொளியன்.

1. சடுகுடு

[வித்துவான் ஞா. தேவநேயன், B. O. L.]

[தமிழ்நாட்டு விளையாட்டுக்கள் (1) போர்வினைபற்றியனவும், (2) தொழின்முறைபற்றியனவும், (4) சிறப்பு நிகழ்ச்சிபற்றியனவும், (5) உடற்பயிற்சியொன்றே கருதினவுமாக ஐவகை. சடுகுடு போர்வினைபற்றியது. விளையாட்டுக்கள் பொதுவாய் ஆடுவார் பால்பற்றி ஆடவர் விளையாட்டு, பெண்டிர் விளையாட்டு, பொது விளையாட்டு என மூவகைப்படும். அவற்றுள் சடுகுடு ஆடவரது.]

சடுகுடு என்னும் விளையாட்டு சடுபுடு, பலி, சடுகுடு, பலி சடுகுடு, பலிச்சப்பிளான், குட்டடி எனத் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் வெவ்வேறு பெயரால் வழங்கிவருகின்றது. இப் பெயர்களில் பலி சடுகுடு என்னும் இருசொற்களும், சடுகுடு விளையாடுமுறையும், இவ் விளையாட்டைப் போர்வினை பற்றியதென்று துணிதற்கு இடந்தரும்.

பண்டைக்காலத்தில், சில தமிழரசர் தம் நாட்டை விரிவாக்கவும் தம் மறச்சிறப்பைக் காட்டவும் பிற அரசரோடு போர் செய்யக் கருதியபோது, காரணமின்றிப் போர் செய்யுங் குற்றத்தை மறைத்தற்பொருட்டுத் தாம் படையெடுத்துச் செல்லக் கருதிய நாட்டிலுள்ள ஆக்களைத் தம் மறவரை ஏவிக் கவர்ந்து கொண்டுவரச்செய்வதும், அவ்வாக்களை மீட்டற்கு அவற்றை இழந்த நாட்டரசன் தம் மறவரை விடுப்பதும், அவ்விருசார் மறவர்க்கும் போர் நிகழ்வதும் வழக்கம். ஆநிரை (பசுமந்தை)யைக் கவர்தலுக்கு வெட்சியென்றும் மீட்டலுக்குக் கரந்தையென்றும் பெயர். போர்த்தெய்வம் காளியாதலின், இருசார் மறவரும் போருக்குச் செல்லுமுன் தாம் வெற்றிபெறும் பொருட்டுக் காளிக்குச் சடுகுடு என்று ஒலிக்கும் துடியடித்துக்கொண்டு பலியிடுவதும் வழக்கம். கொற்றத்தைத் தருபவள் என்று கொள்ளப்பட்டதனால், காளிக்குக் கொற்றவை என்று பெயர். கொற்றம்=வெற்றி; கொற்ற+அவ்வை=கொற்றவ்வை—கொற்றவை.

இவற்றைப்பற்றிய தொல்காப்பிய நூற்பாக்கள்,

"வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்
ஆதந் தோம்பல் மேவற் றாகும்"

'படையியங் கரவம் பாக்கத்து விரிச்சி
புடைகெடப் போகிய செலவே புடைகெட
ஒற்றின் ஆகிய வேயே வேய்ப்புறம்
முற்றின் ஆகிய புறத்திறை முற்றிய
ஊர்கொலை ஆகோள் பூசல் மாற்றே
நோயின் றுய்த்தல் நுவல்வழித் தோற்றம்
தந்துநிறை பாதீ டுண்டாட்டுக் கொடையென
வந்த ஈரேழ் வகையிற் றாகும்."

"மறங்கடைக் கூட்டிய துடிநிலை சிறந்த
கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே."

விளையாட்டு முறை: சிறுவராயினும் பெரியோராயினும் பலர் சேர்ந்து முதலாவது இருதலைவரை ஏற்படுத்திப் பின்பு பிறரை உத்திகூட்டிவரச் சொல்லிச் சமதொகையாக இருகட்சி வகுத்துக்கொண்டு, விளையாடும் நிலத்தில் ஒரு கோடு கீறி, அக் கோட்டிற்கு அப்பாலும் இப்பாலும் நாற்பது அல்லது ஐம்பது அடித் தொலைவில் நின்றுகொள்வர். இருபக்கத்தாரும் மாறிமாறி ஒவ்வொருவராய்க் கோட்டைத் தாண்டி எதிர்க் கட்சியாரை அணுகி, பலி சடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு என்றுவது, 'எட்டுத்திக்கும் வெற்றிபெற்ற என்னை வெல்பவன் யாரடா' என்பதுபோன்ற மறவுரையையாவது, 'மாமியாரின் மொத்து வாங்கும் மருமகனைக் கண்டையா?' என்பதுபோன்ற வேடிக்கையுரைகளையாவது மூச்சுவிடாமல் இடைவிடாது தெளிவாய்ச் சொல்லிக்கொண்டு ஒருவனுக்கும் பிடிகொடாமல் ஒருவனையேனும் பலரையேனும் தொட்டுவிட்டு மூச்சுவிடுமுன் கோட்டைத் தாண்டி வந்துவிடவேண்டும். ஒருவன் தன் எதிர்க் கட்சியாரின் இடத்தில் அவரால் பிடிக்கப்பட்டு மூச்சை விட்டுவிடினும், திரும்பக் கோட்டைத் தாண்டித் தன் எல்லையை அல்லது இடத்தை மிதிக்குமுன் மூச்சை விட்டுவிடினும் பட்டவனவன். அவன் அந்த ஆட்டையில் திரும்ப விளையாட முடியாது. ஒருவன் எதிர்க்கட்சியாரின் எல்லையில் அவருஞ்

எத்தனைபேரைத் தொடுகிறானோ அத்தனை பேரும் பட்டவராவர். ஒருவன் எதிர்க்கட்சியாரால் பிடிபட்டும் அவரை இழுத்துக் கொண்டே வந்து கோட்டைத் தாண்டி அதன்பின் மூச்சை விட்டானானால், அவனைத் தொட்ட அத்தனைபேரும் பட்டுப்போவர். எந்தக் கட்சியில் எல்லாரும் முந்திப் பட்டுப் போவரோ அந்தக் கட்சி தோற்றதாகும். ஆட்ட வெற்றியைக் கெலிப்பு என்றும் தோல்வியைத் தோற்பு என்றுங் கூறுவர். தோற்ற கட்சியார் திரும்ப ஆடி வெற்றிபெற்றுத் தோல்வியை நீக்குவது கடன் கழித்தல் என்றும் ஆட்டை கழித்தல் என்றுங் கூறப்படும். ஆடுகிற ஒவ்வொரு தடவையும் ஆட்டை யெனப்படும். இவை வேறு விளையாட்டுகட்கும் ஏற்கும். இரு பக்கத்தாருக்கும் இடையிலுள்ள கோட்டை எல்லைக் கோடென்றும் நடுக்கோடென்றும் உப்புக்கோடென்றும் வெவ்வேறிடத்தில் வெவ்வேறு சொல்லாற் கூறுவர். அதன் நீளம் வரையறுக்கப்பட்டு அதன் இருமுனையும் ஏதேனுமோர் அடையாளத்தாற் குறிக்கப்படும்.

விளையாட்டு விளக்கம்: சடுகுடு விளையாட்டு ஆநிரையைக் கவர்தலும் மீட்டலுமாகிய போர்வினைகளையே நடித்துக் காட்டுவதாகும். பலி என்னுஞ் சொல் கொற்றவைக்குப் பலியிடுதலையும், சடுகுடு என்னுஞ் சொல் கொற்றவை மகிழுமாறு அவள் முன்பும் ஆநிரை காவலர் மருளுமாறு நள்ளிரவில் திடுமென அவர் முன்பும் துடி கொட்டுவதையுங் குறிக்கும். நடுக்கோடு போர் செய்யும் இருநாட்டிற்கும் இடைப்பட்ட எல்லைப்புறத்தைக் குறிக்கும். இருகட்சிகளுள் முதலாவது பாடிச்செல்வது வெட்சிமறவரையும் இரண்டாவது பாடிச்செல்வது கரந்தை மறவரையுங் குறிக்கும். ஒருவன் நடுக்கோட்டைத் தாண்டுவது வெட்சி கரந்தை மறவர் எல்லைப்புறத்தைக் கடப்பதையும், பட்டுப்போதல் என்னும் வழக்கு அவ்விருதிற மறவரும் போரில் வீழ்ந்திறத்தலையுங் குறிக்கும்.

விளையாட்டிற்கேற்றபடி சில வினைகளின் நடிப்புக்காரர் மாற்றப்பட்டுளார் என்பதை ஓர்ந்தறிக.

விளையாட்டின் பயன் :

(1) மோனை எதுகை யமைய மறவுரைகளையும் நகைச் சுவைக் கூற்றுக்களையும் ஒருவன் தானே புனைந்து யாப்புத்திறனை அடைதல் அல்லது மிகுத்தல்.

(2) நீர் மூழ்குதற்கும், யோகப் பயிற்சிக்கும், வாழ்நாள் நீட்சிக்கும் உதவுமாறு மூச்சை நெடுநேரம் அடக்குதல்.

(3) திருடனைப் பிடித்து நிறுத்துந் திறனை யடைதல்.

(4) பகைவர் பிடிப்பினின்று தன்னை, விடுவிக்கத் தெரிந்து கொள்ளல். பலரை இழுத்துச்செல்லும் வலிமை பெறுதல்.

(5) வேகமாய் ஓடப் பழகுதல்.

(6) உடல் உரமும் நலமும் பெறுதல்.

(இக் கட்டுரை 'தமிழ்நாட்டு விளையாட்டு' என்னும் சுவடியினின்றெடுக்கப்பட்டது. உரிமை ஆசிரியனது.)

தாய் மொழி

1. இனிய தமிழிருக்க
   இன்னும் அதைப் போற்றாதவர்,
   கனியொன் றிருக்கிடவே—கிளியே
   காய்கவர்வார் போல்வாரடி.

2. தாய்மொழி மோசமென்பர்
   தள்ளி யொதுக்கிவிட்டால்,
   தாய்அழகு குன்றினால்—கிளியே
   தள்ளிவைக்கும் மைந்தனுண்டோ ?

3. கரும்பின் இனிக்கும் மொழி
   கன்னித் தமிழ்மொழியை
   விரும்பியே போற்றிடவே—கிளியே
   விதியொன்று சொல்லாயோடி.

—சின்னதம்பி, கோட்டாறு.

பாட்டின் இயல்

(ம. ரா. பாலகணபதி, B. A. L. T., திருத்தவத்துறை)

பாட்டு இன்னதுதான் என்று திட்டமாகச் சொல்லிவிட முடியாது. 'பாட்டு செய்யுளில்லை' என்று மட்டும் சுருக்கமாகப் பாட்டின் இலக்கணத்தைக் கூறலாம். செய்யப்பட்டது செய்யுள். செய்யுள் செயற்கையானது; பாட்டு இயற்கையானது. ஒருவர் உட்கார்ந்து 'கடல் மடை திறந்தாலன்ன' ஆயிரக்கணக்கான செய்யுள்களை வரையறையில்லாது ஒன்றன்பின் ஒன்றாக—(கடல் மடை திறக்கப்பட்டால் கத்தலும் கதக்கலும் கல்லும் மண்ணும் கலந்து வருவதுபோல)-தள்ளிக்கொண்டேயிருக்கலாம். செய்யுள் செய்பவர்களுக்கு யாப்பிலக்கண அறிவும், சொல்லடுக்குகளும், சொல்வதற்கு ஏதாவதொரு பொருளும் இருந்தால் போதும்; உணர்ச்சியே வேண்டியதில்லை. செய்யுள் ஒரு வார்த்தைக் கட்டிடமாகும். சீர்ச் செங்கல்களைத் தளைச் சாந்துகளால் பூசிச் சேர்த்து அணியழகுடன் செயற்கையாகக் காட்டும் கட்டிடந்தான் செயற்கைச் செய்யுள். பாட்டு அப்படிப்பட்டதன்று; காலச் சுழற்சியில் இயற்கையாக அழகுபொலியத் தோன்றும் மலை போன்றது பாட்டு.

செய்யுளை உண்டாக்க வேண்டும்; பாட்டு, தானே பொங்கி எழும். பாட்டு, யாப்பிலக்கண வரையறையில் அமைந்தாலும் அமையலாம்; அமையாமல் இருந்தாலும் இருக்கலாம். இலக்கியத்திலிருந்து இலக்கணம், என்ற முறையில் யாப்பிலக்கணத்திற்கு முதலிலக்கியம் உண்மைப் பாட்டாகும்; செய்யுளன்று. ஓரிடத்தில் உட்கார்ந்து ஒரு வாழ்த்துப்பாவை யாப்பிலக்கணத்திற்கிணங்க எழுதி முடிப்பதால் சொல்நயமும், சில சமயம் ஓசை நயமும் அமைந்து விளங்குதலும் உண்டு. ஆனால் இவையெல்லாம் பாட்டின் பரு இலக்கணங்களேயாம். இப் பரு இயல்புகளையே உண்மை யிலக்கணமாகக் கொண்டு அதன்படி செய்யப்படும் செய்யுள்கள் உயிரற்று உணர்ச்சியற்றுச் சப்பென்றிருக்கின்றன—கேட்போருக்கும் படிப்போருக்கும்-பாட்டுக்கு உண்மையாக வேண்டும் இயல்பு உணர்ச்சியாகும். உணர்ச்சியின்

சொல்வடிவ வெளிப்பாடே பாட்டாகும். எனவே பாட்டு இயற்கை; செயற்கையாகாது.

உணர்ச்சியென்பது சொற் பதங் கடந்த ஒரு நிலையாகும். அந்த நிலையில் நின்று உணர்ச்சி வெள்ளத்தில் திளைத்திருக்கும் ஒருவன், தான் துய்க்கும் இன்பத்தையோ துன்பத்தையோ கொட்டுகிறான். அப்படி வழிந்து விழும் உணர்ச்சி வெள்ளமே பாட்டுருவமாக நமக்குக்கிடைக்கிறது. எனவே, பாட்டென்பது இயற்கையருவி வீழ்ச்சி; செயற்கைக் குழாய் நீர்ப் பீய்ச்சலன்று.

இயற்கையில் எல்லாப் பொருள்களும்—உயிருள்ளவையும் உயிரற்றவையுமாகிய எல்லாம்—ஓர் ஒழுங்கான முறையில் அமைந்திருக்கின்றன. இயற்கையின் முக்கிய இலக்கணமே இந்த 'ஒழுங்கு' ஆகும். இதே ஒழுங்கு முறைதான் பாட்டிலும் வருகிறது. இயற்கையாக உணர்ச்சியுலகில் திளைப்பவன் சொரிகின்ற மொழிகள் ஒலிநயத்துடனும் தாளநயத்துடனும் ஒழுங்காக விழுகின்றன.

இவ்வாறு பிறந்த பல பாட்டுக்களை வைத்தே யாப்பிலக்கணம் வகுத்தனர். பின்பு இந்த யாப்பிலக்கணத்தை வைத்துச் செய்யுள் செய்யத் தொடங்கினர் பலர். இவர்கள் யாத்த செய்யுள்கள் செயற்கையழகையே உடையன—மண்ணால் செய்யப்பட்ட மாம்பழங்கள் போல. கைபுனைந் தியற்றியதில் கவின் பெறு வனப்பு எங்ஙனம் அமைதல் கூடும்?

ஒருவன் அழுதால் அவன் கண்ணில் நீர் வருகிறது; முகம் ஒரு மாதிரி சுழிகிறது; தொண்டையிலிருந்து ஒருவகைக் குரல் ஒரு மாதிரியாக வெளியேறுகிறது...........இதையெல்லாம் பார்த்த ஒருவன் அப்படியே செய்தாலும் அது நடிப்பே தவிர உண்மையான அழுகையாகுமா? இயற்கைச் சிரிப்பிலுள்ள மனவுணர்ச்சி நடிப்புச் சிரிப்பில் வருமோ? இயற்கைப் பூவிலுள்ள அழகு செயற்கைப் பூவில் வருமா?..........இரண்டு பூக்களிலும் நான்கு நான்கு இதழ்கள் ஒரே நிறத்திலிருக்கின்றன; பூவின் மற்றப் பாகங்களும் ஒத்திருக்கின்றன. எனினும் இரண்டு பூக்களும் வேறுபடுகின்றன. ஏன்? ஒன்று இயற்கைப் பூ; மற்றொன்று செயற்கைப் பூ. ஒருவருடைய சிலை அவரைப்போலவே யிருக்கிறது. என்றாலும் அவர் வேறுதான்; சிலை வேறுதான். ஒன்றுக்கு உயிர், உணர்ச்சி, அறிவு இவை உண்டு; மற்றொன்

றிற்கோ இவை இல்லவே இல்லை; பிற பரு இலக்கணங்களெல்லாம் சரியாக இருக்கின்றன.

பாட்டு என்றால் செய்யுளில்லை என்பதுவரை மட்டும் இது காறும் பார்த்தோம். இனி, பாட்டின் சிறப்பிலக்கணம் என்ன என்பதைப் பார்ப்போம்.

"பாடம் படி", "பாட்டுப் படி", "பாட்டுப் பாடு" என்பவை இப்போதும் வழங்கும் சொற்றொடர்கள். "சித்திரபுத்திர நாயனார் கதையை அவன் அவ்வளவு நன்றாகப் படிக்கவில்லையே" என்றால் குறிப்பிட்ட மனிதன் நன்றாக வாசிக்கவில்லை—எழுத்துப் பிழைகளில்லாமல் வாசிக்கவில்லை—என்பது அர்த்தமில்லை. அவன் ஒலியை நீட்டியோ, குறைத்தோ, கைகளை ஆட்டியோ, முகத்தைச் சந்தர்ப்பத்திற்குத் தகுந்தாற்போல் மாற்றியோ படிக்கவில்லை என்பதே பொருள். 'படித்த'லுக்கும் 'வாசித்த'லுக்கும் இவ்வளவு வேறுபாடு உண்டு. படித்தல் என்பது உணர்ச்சியுடன் ஒன்றுபடுவது. வாசித்தல் என்பது உணர்ச்சியோடு கலவாமல் எழுத்துப்பிழை முதலியன இல்லாமல் சும்மா ஒலித்தல்.

'பாட்டு' என்ற சொல் 'படு' என்ற பகுதியிலிருந்து வந்ததாகத் தோன்றுகிறது. 'படு' என்பது 'பாடு' என்றாகிப் பின் பாட்டாயிற்றோ என்று ஊகிப்பதற்கு இடமளிக்கிறது. ஒருவன் மனம் படும் பாடே பாட்டாக வழிந்து வருகிறது. அவன் மனம் உணர்ச்சி வெள்ளத்தில் மூழ்கி இன்பத்தின் எல்லையையோ துன்பத்தின் எல்லையையோ அடைந்து நிற்கும்போதுதான் இயற்கையாகப் பாட்டு வெளி வருகிறது. அதிலும் துன்பமே பாட்டிற்கு முக்கிய காரணமாயிருக்கிறது. துன்பத்தினால்தான் பாக்களின் தோற்றமிருக்கிறது என்றுகூடச் சொல்லிவிடலாம். துன்பத்தில் எளிதாக ஆழ்ந்து விடுவதுதான் மனித இயற்கை. துன்ப நுகர்வு போல இன்ப நுகர்வு எளிதில் கிடைக்காது. மனிதன் படுகின்ற துன்பத்தினால்தான் அவனுக்கு உணர்ச்சி பொங்குகிறதே தவிர, அவன் மிகுதியும் மகிழ்ச்சியாயிருக்கும்போது அவ்வுணர்ச்சி வெள்ளத்தின் ஆழத்தை அறிவதில்லை. துன்பத்தின் எல்லையி லிருந்துகொண்டு இன்பத்தின் எல்லையையும் மனக் கண்ணால் அவன் காணும்போது கூத்தாட ஆரம்பிப்பான். "கண்டேன்" என்பான்; 'வாழி' என்பான்...............இன்னும்

ன்வாறெல்லாமோ பிதற்றுவான். ஆனால் இந்த வெளிப்பட்ட இன்பத்திற்கு அடிப்படையான காரணம் கீழேயிருக்கும் துன்பந்தான். ஆகவே பாட்டிற்கு முதன்மையான காரணம் ஒருவன் படும் பாடுதான்.

ஒருவன் மனம் படும்பாடே பாட்டாக வெளிவருவதால் அப் பாட்டை மற்றொருவர் பாடுவதானால் சும்மா வாசித்து விட்டுப் போனால் அதில் உயிரேயில்லை என்பதை இங்கே சொல்ல வேண்டியதில்லை. ஒருவன் அரும்பாடு பட்டுப் பாடியதை மற்றொருவனும் பெரும்பாடு பட்டுத்தான் பாடவேண்டும். "படமுடியாதினித்துயரம்...........இந்த ஏழை படும் பாடுனக்குத் திருவுளச் சம்மதமோ............பட்டதெல்லாம் போதும்" என்று ஒருவர் பாடியதை இன்னொருவர் குதித்துக்கொண்டு சிரித்த முகத்துடன் தமக்குத் தெரிந்த இராகங்களெல்லாம் வரும்படி இராகமாலிகையில் கையையும் தலையையும் ஆட்டி அசைத்துச் சொற்களை விருப்பப்படி பிரித்துப் 'பாடினால்' அது பாட்டுப் பாடுதலாகுமா? ஆகவே ஆகாது. பாடியவருடைய மனம் பட்ட பாட்டைப் பாடுகின்ற மற்றவர்களுடைய மனங்களும் படவேண்டும். இதைத்தான் 'மனங்கலந்து பாடுதல்' 'நுகர்ந்து பாடுதல்' என்றெல்லாம் சொல்லுகிறார்கள்.

ஆசிரியருடைய மனம் படும் பாட்டை வெளிப்படையாகக் காட்டும் பாக்களே உண்மையான பாட்டுக்களாகும். படிப்பவருடைய மனத்தை இழுக்கும் இயற்கை நல்ல பாட்டிற்கு உண்டு. அவ்வியற்கை இருந்தால்தான் பாட்டாகும். இத்தகைய பாட்டு புகழ்ப் பாடலாயிருக்கலாம்; சந்திரமதி அழுதலாயிருக்கலாம். கலியாண விருந்தில் உண்ட பேருவகையின் தோன்றலாயிருக்கலாம், திருட்டுத் தொழிலின் வீரத்தைப் பற்றி யிருக்கலாம்........எதைப்பற்றியும் இருக்கலாம். எப் பொருளைப்பற்றிச் சொன்னாலும் அதனிடம் நம் மனத்தை இழுக்கும் ஆற்றல் கட்டாயம் இருக்கவேண்டும். மனம்படுகின்ற பாட்டை அப்படியே படம் பிடித்தாற்போலக் காட்டுகின்ற பாடல்களில் கட்டாயம் இந்த ஈர்ப்பு ஆற்றல் இருந்தே தீரும். மனம் படுகின்ற பாடு அப்படியே சொல்வடிவில் வெளிவந்து மற்ற மனங்களையும் ஒன்றுபடச் செய்வதுதான் பாட்டின் இயல்.

குரல் மத்திமமே; சட்சமன்று

[வித்துவான் க. வெள்ளைவாரணனார்]

'குரலே சட்சம்' என்னுந் தலைப்புடன் வித்துவான் தேவ நேயப் பாவாணரவர்கள் செந்தமிழ்ச் செல்வி ௨௦-ஆம் சிலம்பு கூ-ஆம் பரலிதழில் எழுதிய கட்டுரையைப் படித்தேன். பழந் தமிழிசை மரபினை ஆராய்தலையே தமது வாழ்க்கை நோக்கமாகக் கொண்டுழைத்துவரும் அருட்டிரு விபுலாநந்த அடிகளார் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனப் பழந்தமிழ் நூலிற் கண்ட ஏழிசையும் இக்காலத்து வழக்கில் முறையே மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம், சட்சம், ரிஷபம், காந்தாரம் ஆகும் எனத் தமிழ்ப் பொழிலில் வெளியிட்ட ஆராய்ச்சி முடிபினை மறுக்கும் முறையில் இக்கட்டுரை எழுதப்பட்டுளது. முதனூல் வழிநூல்களைப் பிறழவுணர்ந்தும், முதலி லறிய வேண்டிய வுண்மைகளை மறந்தும், ஆரிய வேதங்களை முதனூலாகக் கொண்டும் தமிழிசையை யாராயப் புகுந்தார் இடர்ப்படுவாராயினரென்றும், தமிழ்ப்பொழிலில் விபுலாநந்த அடிகள் எழுதிய இசையாராய்ச்சியைப் படித்தபொழுது 'அவ்வாராய்ச்சி முதலிலேயே கோணியதாகத் தமது அறிவுக் கெட்டிற்று' என்றும் பாவாணர் தம் கட்டுரையின் தொடக்கத்திற் குறிப்பிட்டுள்ளார்.

பழந்தமிழிசை மரபினை ஆராயப்புகுந்தாருள் இயல்நூற் பயிற்சி யொன்றே யுடையார் பழந்தமி ழிசைநூற் பொருட் கூறுகளை இக்கால இசைக்கலையுடன் ஒப்பு நோக்கி ஆராயும் வன்மை பெறுதும், இசைப்பயிற்சியொன்றே யுடையார் பழந் தமிழிசைக் குறியீடுகளும் இசையமைதியும் இவையென உணருந் திட்பமின்றியும் கவல்வாராயினர். பண்டைத் தமிழிசையினைப் பற்றிப் பிற்காலத்தார் பிறழவுணர்ந்து வெளியிட்ட முடிபுகளும் பழந்தமிழிசையைச் செய்கை முறையிற் கண்டு வளர்த்தற்குப் பயன்படா தொழிந்தன. இந்நிலையினை நன்குணர்ந்த விபுலாநந்த அடிகளார் இசைவளர்ச்சியினைக் குறிக்கொண்டு இதுபோது தென்னாட்டில் வழங்கும் 'இசைமரபினையும்; இதற்கு அடிப்படையாக இடைக்காலத்துத் தென்னாடு வடநாடுகளில் வழங்கிய இசையமைதியினையும், சிலப்பதிகார காலத்தும் வேத

காலத்தும் அதற்கு மிக முன்னரும் தமிழ் மக்கள் கண்டு வழங்கிய இசைக்கலையின் நுட்பங்களையும் பன்னிரண்டாண்டுகளாக இடைவிடாதாராய்ந்து வரலாற்று முறையில் எழுதிவரும் இசை நுணுக்கங்களை யுணர்வோர் அடிகளாரது ஆராய்ச்சி பல்லாண்டுகளாக மறைந்து போன பிற கலைகளை ஆராய்வார்க்கும் ஆராய்ச்சி முறையிதுவென வுணர்த்தும் உரையாணியாக விளங்குதலை நன்கு தெளிவர்.

(க) "ஷட்ஜம் முதலாக உள்ள பெயர்கள் எழுந்ததற்பின் தென்னாட்டு இசைமரபு தோன்றியிருப்பின் அப்பெயர்கள் தமிழிலும் ஏற்கெனவே வந்திருக்கவேண்டும். அங்ஙனம் வாராமையாலே பழந்தமிழிசை மரபு பரதம் நாரதசிக்ஷை யென்னுமிவற்றிற்கு முந்தியதென்பதற்குச் சான்றாகிறது"

(உ) "அகத்தியர் தென்னாட்டிற்கு வருவதற்கு முன்னே இசைமரபும் இசைக்கருவிகளும் தென்னாட்டிலிருந்தன"

(௩) "இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மறைந்ததும் பழந்தமிழ் நாட்டு நாகரிகத்தொடு தொடர்புடையதுமாகிய மொகெஞ்சதரோ (Mohen-go-daro) நாகரிகத்திலே, மிதுனம் எனப் பிற்காலத்து வானநூலிலே வழங்கப்படும் விண்மீன் கூட்டம் 'யாழ்' என்னுந் தமிழ் மொழியினாலே வழங்கப்பட்டதெனவும், இணைமக்கள், இணையாழ்க்கருவிகள் என்னுமிவற்றினாலே குறியீடு செய்யப்பட்டதெனவும் வணக்கத்துக்குரிய ஹீராஸ் (Fr. Heras) என்னும் பேரறிஞர் எடுத்துக்காட்டினமையின் **வேதகாலத்திற்கு மிக முந்தியே தமிழ் யாழ் இருந்ததென்பது முடிவாகின்றது.**"

இன்னோரன்ன தொடர்களால் விபுலாநந்த அடிகளார் தாம் ஆராய எடுத்துக்கொண்ட தமிழிசைச் சூழல் மிகமிகத் தொன்மை வாய்ந்ததென்னு முண்மையை யெடுத்துக்காட்டி வற்புறுத்தியிருக்கவும் அதனை யொருசிறிதும் உணராத பாவாணர் 'ஒருவர் எத்துணைக் கலையில் தெளிவும் ஆராய்ச்சி வன்மையும் வாய்ந்தவரெனினும் ஆரிய வேதங்களை இசை முதனூலாகக் கொண்டு ,ஆராயின் விளக்கின்றிப் புத்திருள்வழிப் போவார் போல், இடர்ப்படுவாராவர்' என அடிகளார்மேற் பொருந்தா இடுவந்தி கூறுகின்றார்.

ஒரு பொருளை ஆராயும் முறையிற் பிறர் கொள்கையை மறுக்கப் புகுவோர் முதற்கண் தம்மால் மறுக்கப்படும் கொள்கையின் முழுவிரிவையுந் தெரிந்துகொள்வதுடன் அக்கொள்கையாளர் கருத்திது வென்பதனையும் தெளிந்துகொள்ளுங் கடமையினராவர். இம்முறையில் நண்பர் பாவாணர் தம் கடமையினை மறந்தன ரென்பதற்கு இவராற் கூறப்பட்ட குறைகளே சான்றுதல் காண்க.

அடிகளாரது ஆராய்ச்சியின் முடிபாகக் **குரல் என்பது மத்திமமே** என்னும் விரிவினையாராய விரும்புவோர் அண்மையில் கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடாக வரும் **யாழ்நூலிற்** கண்டு தெளியக் கடவர். இனி, பாவாணர் குரலே சட்சம் என்னும் தன் மதம் நிறுத்தற் பொருட்டுக் கூறிய காரணங்களை ஆராய்வாம்.

(க) **கூற்று :** "ஏழிசை வரிசையிற் குரல் முதலிற் கூறப்படுதல், இதுகாறும் எத்தமிழ் நூலினும், குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரம் என்ற வரிசையிலேயே ஏழு சுரங்களும் கூறப்படுகின்றன."

மறுப்பு : நமக்குக் கிடைத்த தமிழ் நூல்களுள் சேரமுனிவ ரருளிய சிலப்பதிகாரமொன்றே பழந்தமிழிசை விரிவினை ஒருவாறு விளக்கும் இசை முதனூலாக அமைந்துள்ளது. இளங்கோவடிகள் ஏழிசை நரம்புகளைக் கூறுமிடத்து 'உழைமுதற் கைக்கிளையிறுவாய்க் கட்டி' என உழைநரம்பினை முதலாகவும், தாரத்தாக்கங் கூறுமிடத்து 'இளிமுதலாகிய எதிர்படுகிழமை' என, இளிநரம்பினை முதலாகவும், யாழுங்குழலுமாகிய கருவிகளையிசைப்போரைக் கூறுமிடத்துக் 'குரன்முதலேழும் வழுவின்றிசைத்து' எனக் குரல்நரம்பினை முதலாகவும், இன்னுமிவ்வாறே பிற நரம்புகளை முதலாகவுங் கொண்டு இசைநிலை வேறுபாடுபற்றி வரிசைப்படுத்திக் கூறுதலால் ஏழிசை வரிசையிற் குரலொன்றே முதலிற் கூறப்பட்டதெனல் பொருந்தாது.

(உ) **கூற்று :** மத்தளத்திற்கு வலக்கண் குரலென்றல். சிந்தாமணியில் 675-ம் செய்யுளுரையில்,

> "இடக்கண் இளியாய் வலக்கண் குரலாய்
> நடப்பது தோலியற் கருவி யாகும்"

என்பது மேற்கோள். தண்ணுமை, முழவு, மத்தளம், மிருதங்கம் எனப் பலவாறு சொல்லப்படும் ஓரினத் தோற் கருவிகளில், தொன்றுதொட்டு வலக்கண்ணே சட்சமாயிருந்து வருகின்றது."

மறுப்பு: இக்கூற்றின் உண்மையை இதுபோது அண்ணமலைப் பல்கலைக்கழக இசைப் பேராசிரியராக விளங்குந் திருவாளர் க. பொன்னையா பிள்ளையவர்களிடம் உசாவியறிந்தபோது மத்தளத்தின் வலக்கண்ணில் ஆதாரசட்சமும், அதன் இடக்கண்ணில் அவ்வாதார சட்சத்திற்கு ஒத்ததாய் மந்தரத் தானத்திலுள்ள கீழ்சட்சமும் தோன்றுமென அவர்கள் குறிப்பிட்டார்கள். இசைநுட்ப மறிந்த அப்பெரியார் குறித்த மரபின்படி 'இடக்கண் இளியாய்' எனத் தொடங்கும் நூற்பாவிற்குப் பொருள் காணுமிடத்துப் பாவாணர் கூறும் பொருள் இசை மரபுக்குப் பொருந்துவதாயில்லை. என்னை? குரல் என்னுஞ் சொல் பாவாணர் கருத்துப்படி சட்சத்தைக் குறிக்குமெனக் கொண்டால் அம்முறையே வைத்துப் பார்க்கக் குரலின் ஐந்தாஞ் சுரயாகிய இளி பஞ்சமமாதல் வேண்டும். எனவே "இடக்கண் இளியாய்" என்பதற்கு மத்தளத்தின் இடப்பக்கத்துக் கண்ணிலே பஞ்சம இசை தோற்றுமெனல் வேண்டும். ஆயின், இசை மரபின்படி மந்தரஷட்சமே தோற்றுவதாகத் தண்ணுமையாசிரியர் கூறுகின்றனர். அம்முறைப்படி இடக்கண்ணிற் றோன்றும் இளியைச் சட்சமாகவே கொள்ளவேண்டியுளது. அங்ஙனங் கொள்ளுங்கால் 'வலக்கண் குரலாய் என்பதிற் குரல் என்பதனைச் சட்சமாகக் கோடல் பொருந்ாதென்பதும் புலனாகும். வலக்கண் குரலாய் என்னுமிடத்து வந்த குரற் சொல்லுக்கு நும் கருத்துப்படி மத்திமம் எனப் பொருள்கோடலும் இவ்விடத்திற்குப் பொருந்தாதெனிற் கூறுதும். குரல் என்னுஞ் சொல் வந்தவிடமெல்லாம் அஃது ஏழிசையு ளொன்றினைக் குறித்ததெனக் கொள்ளலாகாது. என்னை? இளங்கோவடிகள் "குரல்குரலாகத் தற்கிழமை திரிந்தபின்" என்னும் அடியில் முதனின்ற குரலை ஏழிசையு ளொன்றுக்கியும் இரண்டாவது வந்த குரற்சொல்லைத் தொடங்குமிசை யென்ற பொருளிலும் வழங்கியிருத்தலானும், இம்முறையைப் பின்பற்றியே அரும்பதவுரையாசிரியர் முதலியோரும் 'தாரங் குரலாக, விளரி குரலாக,

இனி குரலாக' என்றுங்குக் குரல் என்பதனைத் தொடங்குமிசை யென்ற பொருளிற் பல சுரங்களோடுந் தொடுத்து வழங்கினமை யானும் என்க. எனவே இவ்வுண்மை கருதி 'வலக்கண் குரலாய்' என்பதற்கு மத்தளத்தின் வலக்கண்ணில் இசைநூல் மரபுபடி ஆதாரஷட்ஜமாகிய தொடங்குமிசை தோற்றும் எனப் பொருளுரைத்தலே சிறந்ததாதல் இக்கால இசையாசிரியர்க்கும் உடன்பாடென்பது பெறப்படும்.

(௩) **கூற்று:** குரலை முதற்றனமென்றல். 11-ம் புறப் பாட்டில், 'குரல் புணர் சீர்' என்னுந் தொடருக்கு "முதற்றனமாகிய குரலிலே வந்து பொருந்தும் அளவையுடைய பாட்டை' என்பது பழையவுரை"

மறுப்பு: இசைப்பாடல் பாடுவோர் பாடற்குரிய ஏழிசைகளையும் மந்தரம், மத்திமம், தாரம் என்னும் மூவகைத்தானங்களில் அமைத்துக்கொள்ளுதல் இக்கால இசைமரபிலும் வழங்கும் முறையாகும். இம் மூவகை நிலைகளையும் பண்டையிசையாசிரியர் முன்றியே **மெலிவு சமன் வலிவு** என வழங்கினார்களென்பதும் ஏழிசையினை இரண்டு நிரற்படுத்திய பதினான்கு சுரங்களையும்

மெலிவு	சமன்	வலிவு
ம ப த நி	ச ரி க ம ப த நி	ச ரி க

என நிலைப்படுத்தினார்களென்பதும் சிலப்பதிகாரத்தானும், அதன் உரைகளானும் நன்கு விளங்குவனவாம். இதனையே சேக்கிழார் நாயனாரும் "மந்தரத்தும் மத்திமத்துந் தாரத்தும் வரன்முறையால், தந்திரிகள் மெலிவித்தும் சமங்கொண்டும் வலிவித்தும்" என ஆனாய நாயனார் புராணத்து விளக்கிப்போந்தார்கள். இம் மூவகைத்தான நிலையிலமைத்துப் பாடுங்கால் முதற்றனமாகிய மெலிவுத் தானத்திலே முதற்கண் நின்ற குரலாகிய மத்திமத்திலே எடுத்த இசை மீண்டும் அதன்கண் வந்து முடியும் முறையிலமைந்த பாடலிசையினையே 'குரல்புணர் சீர்க்கொளை' எனப் பேய்மகள் இளவெயினியாரும், 'முதற்றனமாகிய குரலிலே வந்து பொருந்தும் அளவையுடைய பாட்டு' எனப் புறநானூற்றுரையாசிரியரும் குறித்தனராதல்வேண்டும். எடுத்த இசையில் முடித்தற்கு இக்கால இசைமரபிலும் பல எடுத்துக் காட்டுகள் கூறலாம்.

அன்றியும் பாவாணர் கருதுமாறு ஒரு சுரத்தை முதற்றுன மென்றல் இசைநூல் வழக்கன்மையுமுணர்க. குரல்புணர்சீர்க் கொளைவல் பாண்மகன் என்பதற்குப் 'பாடினி பாடலுக்கேற் பக் கொளைவல் பாண்மகன் எனினும் அமையும்' என இத்தொ டர்க்கு உரையாசிரியர் வேறுமொரு பொருள் கூறுதலை நோக் குங்கால் பாடினியின் பாடலைக் குரல் எனப் புலவர் கூறினர் என்பதும் புலப்படும். இசைக்குச் சிறந்த மகளிரது மிடற்றோசை இயல்பாகவே மத்திமமாகிய குரல் என்னும் ஓசையுடன் ஒத்து நிற்பதாதலின் அதுபற்றிப் பாடினி பாடலைக் குரல் எனக் கூறி யதன் நுட்பமும் நன்கு பெறப்படுகின்றது. இதனாலும் குரல் மத்திமமே என்பது தெளிவாதல் காண்க.

(ச) கூற்று: "கேள்விச் சுரம் இயல்பாய்ச் சட்சமாயிருத் தல். எவர் பாடினும் இயல்பாய்ப் பாடும்போது மத்திம மன்றிச் சட்சமமே சுருதியாயிருத்தலின், அதனையே முதற்சுர மாக நம் முன்னோருங் கொண்டிருக்க வேண்டும்."

மறுப்பு: இயல்பாய்க் கேட்கப்படும் சுருதி அல்லது கேள்வி யென்பது எவ்வகைச் சுரத்திற்கும் ஏற்குமாறமைந்த ஓசையையே குறிக்குமன்றிச் சட்சத்திற்குமட்டுமுரியதாய் அத னைக் குறிக்குமென்றல் இசை மரபுக்கு எட்டுணையும் பொருந்துவ தன்றும்.

(ரு) கூற்று: குரல் என்னுஞ் சொல் தொண்டையையும் அதிற் பிறக்கும் ஓசையையுங் குறித்தல்.

மறுப்பு: பாவாணர் கூற்றுப்படி குரல் என்னுஞ் சொல் தொண்டையையும் பின்னர் அதிற் பிறக்கும் ஓசையையும் குறிக்குமென்பதனை யாமும் உடன்படுகின்றோம். ஆயினும் தொண்டையிற் பிறந்து குரற்பெயராற் குறிக்கப்படும் ஓசை எது வென்பதே நமது வினா ஆகும். ஏழிசையும் தொண்டை வழி யாக வெளிப்படுமாயினும் அவ்வோசை எழுந்து பரவித் தாக்கு மிடங்களையே இசைநூலார் ஏழிசைக்கும் பிறப்பிடங்களாகக் கொண்டனர். இவ்வுண்மையினை நோக்காது ஏழிசைப் பிறப் புணர்த்தும் பழைய சூத்திரப் பொருளை உடல்நூற்கும் ஒலி நூற்கும் ஒவ்வாவென மறுத்துப் பேசினர் பாவாணர். இடத்

தாலும் முயற்சியாலும் பிறப்பு வேறுபட்டுத் தோன்றும் எழுத்துக்கள் யாவும் ஒவ்வொருகால் ஏழிசையுள் ஒவ்வொன் றின்பாற் பட்டு அடங்குதலால் அவ்வெழுத்துக்களின் நிலைக் களங்களையே ஏழிசையின் பிறப்பிடமெனக் கொள்ளலாகாது. எவ்வகை யெழுத்துக்களின் ஒலித்தொகுதியும் ஏழிசையினுள் ஒவ்வொன்றாய்க் கிளர்ந்து பரவிச் சென்று தாக்குமிடங்களையே ஏழிசையின் பிறப்பிடங்களாக நம் தமிழிசை நூலோர் துணிந்து கொண்டனராதல் வேண்டும்.

> "குரலது மிடற்றிற் றுத்த நாவினிற்
> கைக்கிளை யண்ணத்திற் சிரத்தி னுழையே
> இளிநெற் றியினில் விளரி நெஞ்சினில்
> தார நாசியிவை தம்பிறப் பென்ப"

என அடிகளார் காட்டிய பழஞ் சூத்திரத்தின் ஏழிசைக்கும் கூறிய பிறப்பு முறையினைத் தமிழிசையோடு தொடர்புகொண்ட வடமொழி நூல்கள் கூறும் பிறப்பிடங்களோடு ஒப்பவைத்து நோக்குமிடத்து, குரல் முதலாக எண்ணப்பட்ட ஏழும் முறை யே இக்கால வழக்கில் மபதநிசரிக வாம் என அடிகளார் தெளிவுபடுத்தினமையான் அம்முறையே மிடற்றிற் றோன்றும் மத்திமத்தை அது தோன்றுதற் கிடமாகிய குரல் என்ற பெய ராற் சொன்னால் வருங் குற்றம் யாது? இசைமரபின்படி நெற்றியிற் சென்று சாரும் ஓசையையுடைய சட்சத்தை மிடற் றிற் றோன்று மென்று குரலெனக் கோடற்கு எவ்வகைத் தொடர்பு மில்லையே?

(சு) **கூற்று:** "குரலே சட்சமாக மாபெரும் புலவர் ஆபிரகாம் பண்டிதர் கொண்டமை"

மறுப்பு: மேற்கூறியவாறு பாவாணர் காட்டும் இறுதிக் காரணமே இத்தகைய மறுப்புரையினை இவர் எழுதியதற் குரிய முதற்காரண மாகுமெனக் கருதுகின்றோம். பண்டைத் தமிழிசை வளர்ச்சியினைக் குறிக்கோளாகக் கொண்டு இயற்புல வரையும் இசைப் புலவரையும் உசாவி யறிந்து தமிழிசை வளர்ச் சிக்குப் பயன்படக்கூடிய வகையில் இசைநூற் கருத்துக்களைக் கருணாமிருதசாகர மெனப் பெரியதோர் நூலாகத் திரட்டி யுதவிய செந்தமிழ்த் திருவாளர் ஆபிரகாம் பண்டிதர் அவர்கட்

குத் தமிழர்களாகிய யாம் எழுமையுங் கடப்பாடுடையோம். ஆயினும் அவர்கள் அந்நூலை எழுதிய காலத்து அதற்கு அடிப்படையாயிருந்த சிலப்பதிகாரவுரைப் பகுதியில் சிலவிடத்துப் பிற்கால இசைவழக்கு மாறுதலால் உண்மைப்பொருள் பிறழ்ச்சியடைந்தும் சில அரிய பாட வேறுபாடுகளால் மறைந்தும் காணப்பட்ட நிலையினை உண்மையுருவமாகக் கொள்ள நேர்ந்தமையினால் அவர்தம் நூலிற் சில விடங்களில் அடிப்படைக் கருத்துக்கள் பிறழ்ந்து காணப்படுகின்றன. இதனைப் 'பண்டிதரவர்களின் இசையாராய்ச்சி நூலில் இரண்டொரு சிறு சருக்கல்களிருப்பதாகத் தெரியினும்' என்னும் பாவாணர் கூற்றுங் குறித்தல் காணலாம். அவர் கண்ட இரண்டொரு சிறு சருக்கல்களுடன் குரலைச் சட்சமெனப் பிறழவுணர்ந்ததனையும் ஒரு சருக்கலாகச் சேர்த்துக்கொள்ள வேண்டுகின்றோம்.

ஆராய்ச்சியின் முதலில் துணியப்பட்ட கருத்தொன்று ஆராய்ச்சி விரிவடைந்த காலத்துத் திருத்தம் பெறாத வியல்பாதலால் அதுபற்றிப் பண்டிதரவர்கள் தமிழ்த்தொண்டு நம் அடிகளாரால் மறுக்கப்படாமை பாவாணர் உளங் கொள்வாராக.

இதுகாறுங் கூறியவாற்றால் பாவாணர் தன்மதம் நிறுத்தற்பொருட்டுக் கூறிய காரணங்கள் யாவும் ஆராய்ச்சியுணர்வுக்குப் பொருந்தாமை கண்டாம். இனி அடிகளார் கொள்கையை அவர் மறுக்கும் முறையினை ஆராய்வாம்.

(க) 'குரல்துத்தம் நான்கு கிளைமூன் றிரண்டாம்
குரையா உழைஇளி நான்கு — விரையா
விளரியெனின் மூன்றிரண்டு தாரமெனச் சொன்னார்
களரிசேர் கண்ணுற் றவர்'

என ஏழிசைக்கும் அலகுநிலை (சுருதிக் கணக்கு) கூறிய பழைய வெண்பாவினைக் கொண்டு இளி முதலாக எண்ணிப் பார்த்தால் முறையே சரிகமபதநி என்னும் ஏழு சுரங்களுக்கும் பொருந்திய அலகுகளாகிய 4, 3, 2, 4, 4, 3, 2 என்பன பெறப்படுதலானும் இளியே சட்சம், குரல் மத்திமமே என்பதனை அடிகளார் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

இதனை மறுக்கப் போந்த பாவாணர் 'முதலாவது, அலகுகளே இன்னும் இத்தனை யென்று திட்டமாகத் தெரியவில்லை

அலகு மொத்தம் 24 என்றும்; 22 என்றும் இருவேறு கொள்கைகள் இருந்துவருகின்றன.' எனத் தடை கூறுகின்றார். அலகுகள் இத்தனையென்று ஆராய்ந்து காண்பதே இசையாராய்ச்சிக்கு அடிப்படையாகும். அதனைத் தெரிந்து துணிய உளங்கொள்ளாத பாவாணர் அதன் மேற்படியாகிய இசையாராய்ச்சிபற்றி மறுக்கப் புகுவது பெரும் பிழையன்றே? ஒன்றனை ஆராய்வார் ஒரு வரம்புடைக் கொள்கையில் நின்றாராய் தற்குரியர் என்னும் வரம்பு கோலிய பாவாணரே அவ்வரம்பினை மீறுதல் தகுதியன்றும். திருவாளர் ஆபிரகாம் பண்டிதரவர்கள் நூலும் இவ்வடிப்படையான அலகுநிலை யாராய்ச்சியிற்றானே பிழைபட்டுள்ளது? அடிகளாரது நுண்புலமையினால் சிறந்த இசைநூலடிப்படையாக வைத்து ஆராயப்படுவனவற்றுள் அலகுநிலையாகிய சுருதிக்கணக்கும் ஒன்றன்றோ? இன்னின்ன சுரங்கள் இத்தனை யித்தனை அலகுகள் பெறுமெனக் கூறும் மேற்காட்டிய பழம் பாடலைத் துணைக்கொண்டு நோக்குமிடத்து ஏழிசைக்கும் கொடுத்த மொத்த அலகினைக் கூட்டிப்பார்க்க 22 சுருதிகள் தானே பெறப்படுகின்றன. இருபத்து நான்கைக் காணேமே. சுருதி 24 என்ற கொள்கை எப்போது வந்தது? மேனாட்டாரால் அண்மைக்காலத்தே பொறிநூற் கருவிகளின் துணைகொண்டு வகுக்கப்பட்ட சமன்செய்த சுருதியினைப் பண்டைத் தமிழர் கொள்கை யென்றல் எங்ஙனம் பொருந்தும்?

(உ) ஏழிசைகள் இன்ன என்னும் ஆராய்ச்சியில் தென்மொழி வடமொழிகளில் அவற்றிற்கு ஒத்தனவாகக் கூறப்பட்ட பறவை முதலியவற்றின் ஓசை வரையறையினை அடிகள் குறிப்பிட்டது, அவ்வொப்புமை கொண்டு குரல் துத்தம் முதலியவற்றை இக்கால வழக்கிலுள்ள மத்திம முதலியனவாக இசையறியாரும் ஒப்புநோக்கி வகைப்படுத்தற்பொருட்டேயாம். இதனால் ஏழிசைகளும் பறவை முதலியவற்றின் ஓசையினையுணர்ந்தபின் எழுந்தன என்று அவர்கள் கருதுவதாகப் பிறழவுணர்தல் தவறு. கல்லாட முதலிய நூல்கள் பிறவற்றின் ஓசையைக் குறிப்பினும் முன்னர் அடைவுபடுத்தினவற்றுடன் அவை ஒக்குமெனக் கோடலன்றிப் பிங்கல முதலியவற்றின் ஓசையொப்புமை பொருந்தாதெனக் கோடல் எங்ஙனம்? குரலை

மத்திமமாகக் கொண்டு பறவை முதலியவற்றின் ஓசையால் ஒப்புக்காணுமிடத்துப் பாவாணர் கருத்துப்படி நாற்சுரங்கட்கு உரியவையேனும் ஒத்துவருகின்றனவே. அங்ஙனம் ஒப்பக் கண்ட சுரங்களை நிலையாகக்கொண்டு முன்னும்பின்னுமுள்ள பிற மூன்று சுரங்களிவை யெனவும் ஆராய்ந்து கொள்ளலாமே. தம் கொள்கைக்கு ஆதாரமாகாதனவற்றைக் கருவியன்று எனத் தள்ளும் வெறுப்பு அன்பர்மாட்டுத் தோற்றுதற்குக் காரணமென்னையோ அறியோம்.

(௩) மூன்றாவதாக ஏழிசையின் பிறப்பு முறைபற்றி அடிகளார் கூறியனவற்றைப் பாவாணர் மறுத்தமை பொருந்தா தென முன்னர்க் காட்டினும்.

(௪) சிலப்பதிகாரத்து 'வண்ணப் பட்டடை' என்னுந் தொடரில் வந்த பட்டடை யென்பதனை எல்லாப் பண்ணிற்கும் அடிமணையாகிய இளிநரம்பெனக் கொண்டார் அடியார்க்கு நல்லார். ஷட்ஜம் என்னும் பெயரும் ஏனைய ஆறு சுரமும் பிறத்தற்கிடமாயது என்னும் பொருள்தருதலால் இளி சட்சமே எனக் கொண்டார் அடிகளார்.

இதனை மறுக்கப்போந்த பாவாணர் 'ச - ப என்னும் சுரப்பிடிப்பே பண்களுக்கெல்லாம் அடிப்படையாதலின் பஞ்சமம் (............) பட்டடையென்றும் வண்ணப் பட்டடை யென்றும் கூறப்படுவதாயிற்று' எனக் கூறுகின்றார். அவர் கருத்துப்படி ச - ப என்னும் இரண்டன் சுரப்பிடிப்பும் அடிப் படையாவனவென்றால் பஞ்சமம் ஒன்றினைமட்டும் பட்டடை யெனக் கொள்வதேன்? ஏனைய ஆறு சுரங்களுக்கும் அடிப் படையாய் முதலினுள்ள ஷட்ஜமன்றோ பட்டடை யென்று சிறப்பித்தற் குரியது. ஆகவே தங்கொள்கை யன்றென்னும் ஒரு காரணம் பற்றியே பிறர் கூறுவன வனைத்தையும் மறுக்க வேண்டும் எண்ணத்துடன் பாவாணர் இம் மறுப்பினை எழுதி யதாக அறிகின்றோம். இவ்விசை நூல் நுட்பமனைத்தும் அண் மையில் வெளிவரும் அடிகளாரது யாழ்நூலகத்துக் கண்டு அன் பர்கள் ஐயந் தெளிவார்களாக.

இயற்கையிற் காதல்

வித்துவான் G. சுப்பிரமணிய பிள்ளை, M. A., B. L.,

(௩௮௬-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்னுமோர் இயற்கைக் காட்சியைக் காண்போம். செல்வம் கொண்டே ஒருவன் உலகில் வாழ்க்கையை இனிது நடத்த முடியும். இல்லை யென்போர்க்கு இல்லை யென்னாது ஈவதும், பகைவரை வென்று புகழ்மாலை சூடுவதும் உள்ளவர்க்கே கைகூடும் என்று நினைத்து, ஒருவன் தன் காதலியைப் பிரிந்து காய்ந்தெரியும் கானமொன்றைக் கடந்து சென்றான். வழியெங்கும் காலை வைக்கவும் முடியாதபடி வெப்பத் தீ வாட்டிக்கொண்டிருந்தது. அத் துன்பத்தினிடையும் பிரிவறியாத, களிறும் பிடியுமான இரண்டு யானைகள், தங்கள் கன்று பின்னால் வர, ஒரு நீர் நிலையை அடையக் கண்டான். வற்றியுலர்ந்த அக்குளத்தில் சிறிதளவு நீரே உண்டு. அதைக் கண்டதும் யானைக்கன்று துள்ளிப் பாய்ந்து தன் துடி போன்ற காலினால் கிண்டிக் கலக்கியது. அக் குட்டியின் விளையாட்டைக் கண்ணுற்று யானைகள் தம் நீர்வேட்கையையும் மறந்தனபோலும். பின், ஆண்யானை தன் பிடிக்கு அக் கலங்கிய நீரை முதலில் ஊட்டி அதன் வயிறு நிறைந்தது கண்டு, பின் எஞ்சியுள்ள நீரைத் தான் பருகி மனமகிழ்வதை அக் காதலன் கண்டான். கன்று கலக்கிய சிறிதளவு நீரேயாயினும் அதைத் தன் பெண்ணோடு பகுத்துண்டு பிரியாது ஒன்றி வாழும் அவ் விலங்குகளின் நற்பேறே பேறு, என்று நெட்டுயிர்த்தான். பசும்புல்லும் தலைகாட்டாத அப் பாழ்ஞ்சுரத்தில் வாழும் புறவுகளின் காதல் ஒருபால் நிகழக் கண்டான். பெடைகள் வெயிலின் கொடுமையால் வாடி வதங்குவதைக் கண்டு ஆண் புறவுகள் அன்புகூர்ந்து, தமது மெல்லிய சிறகுகளை விரித்து அந் நிழலாலே அப் பெடைகளின் வெம்மையைத் தணிக்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சிதான். ஆண்புறவு சிறகை விரிப்பதும், அதன் அடியிற் பெண்புறவு அடங்கி ஒடுங்குவதும், ஆண்புறவு இதஞ்சொல்லி ஆற்றுவது போலத் தன் கோலிய சிறகாற் புல்லி அன்பு செய்து ஆதரவளிப்பதும், சிறகினுள் இடுக்கிச் சிரமந் தீர்ப்பதும், படபடவென்று சிறகையடித்து விசிறிக்கொண்டு வெந்துயர் களைவதும் இயற்கையுண்மையின் 'இதிகாச'மேயாகும். கடத்தற்கரிய கனலுமிழும் அக் கொடுங்கானத்தில் வளர்ந்த மூங்கில்களும் பாறைகளின் வெம்மையால் கரிந்து போயின. நிழல் இல்லாத கொடுமையால் புல்வாய் இனங்கள் புலம்பித் தவித்தன. ஓர் ஆண்மான் வெயிலாற் சாம்பி வதங்கும்

தன் பிணையைக் கண்டு மனமிளகி, தான் அசையாமல் நின்று கொண்டு தன் நிழலிலே அப் பிணையைப் படுக்கச் செய்து பரிவு காட்டியது. இவ்வாறு அன்பாய்த் தன் பிணைக்கு ஆறுதல் அளிக்கும் நிலைநோக்கிப் பேருவப்பெய்தும் அக் கலைமான் பண்ணிய தவம்தான் என்கொல்! இவ் வன்புக் காட்சிகளை யெல்லாம் கண்ட அக் காதலன் மனம், என்ன, கல்லா? இவை அவனுக்குத் தன் ஆருயிர் மடக்கொடியை நினைப்பூட்டி, அவள்பால் அவனை இழுத்துச்செல்லும் அல்லவா! ஆகையால் அவன் விரைவில் மீண்டு வீடுவருவான் என்றும், அதற்கியைந்த நிமித்தங்கள் மனையின்கண் காணப்படுகின்றன என்றும் தலைவி வாயிலாகக் கவிஞர் கூறும் பாடல் வருமாறு :—

" அரிதாய அறனெய்தி அருளியோர்க் களித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்
புரிவமர் காதலிற் புணர்ச்சியுந் தருமெனப்
பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்றநங் காதலர்
வருவர்கொல் வயங்கிழாஅய் வலிப்பல்யான் கேஎளினி;
அடிதாங்கு மளவின்றி அழலன்ன வெம்மையாற்
கடியவே கனங்குழாஅய் காடென்றார் அக்காட்டுள்
துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவு முரைத்தனரே;
இன்பத்தி னிகந்தொரீஇ இலைதீந்த உலவையால்
துன்புறூஉந் தகையவே காடென்றார் அக்காட்டுள்
அன்புகொள் மடப்பெடை அசைஇய வருத்தத்தை
மென்சிறக ராலாற்றும் புறவெனவு முரைத்தனரே;
கல்மிசை வேய்வாடக் கனைகதிர் தெறுதலால்
துன்னரூஉந் தகையவே காடென்றார் அக்காட்டுள்
இன்னிழ லின்மையான் வருந்திய மடப்பிணைக்குத்
தன்னிழலைக் கொடுத்தளிக்குங் கலையெனவு முரைத்தனரே;
எனவாங்கு,
இனைநல முடைய கானஞ் சென்றோர்
புனைநலம் வாட்டுந ரல்லர் மனைவயிற்
பல்லியும் பாங்கொத் திசைத்தன
நல்லெழி லுண்கணும் ஆடுமா லிடனே" (கலித்தொகை—11)

ஒரு கணவன் தொழிலின் நிமித்தம் பிரிந்து செல்லக் கருதினன். அவன் மனைவியும் உடன்வருவதாகத் தெரிவித்தாள்.

கணவன்—"பெண்ணே! நான் செல்லவேண்டிய வழியோ காட்டுவழி. கதிரவனின் கடுஞ்சினத்தால் எங்கும் நெருப்பு வீசிக் கொண்டிருக்கும். கிளிமொழியாய்! மழை யென்பதே அறியாத அக்காடு நின் மெல்லடியால் மேவுதற்கெளிதோ?"

மனைவி—"தலைவ! காற்றினும் நிலைநில்லாத வாழ்நாளை யுடைய யான் உம்மோடு உடனுறைவதையே வாழ்வாகக் கொண் டுள்ளேன். உம்மைப் பிரிந்து துயருற்று இறத்தல் நல மாகுமா?"

கணவன்—"அமிழ்தூறும் அணிமுறுவலாய்! நீ அங்குவந்து தண்ணீர் கேட்டுத் தவித்தால் யான் என்செய்வது?"

மனைவி—"தாங்கள் அறம் நோக்கித் தளர்வதை அறிந்தேன். ஆனால், ஆற்றில் நீர் சென்று கழிந்தாலொத்த நிலைத்திராத இள மையையுடைய யான் உமது நெஞ்சமே தஞ்சென வாழ்கின் றேன். யான் உம்மை நீத்து மனமுடைந்து மாண்டு முடிவது நலமாகுமா?"

கணவன்—"வேய்வென்ற தோளி! மரமும் நிழலுமற்ற அக் காட்டில் நீ எங்ஙனம் வருதல் கூடும்?"

மனைவி—"யான் வெயிலால் வருந்தினும் உமது தண்ணளி யைப் பெற்று மகிழ்வதே மேலானது. உமது அடிநிழலைப் பெறாது இவ்வில்லின் நிழலிலே தங்குவேனாயின், நீண்டநாள் வெயிலின்றி நிழலில் நின்ற தளிரானது வெளுத்து அழகு மாறுவதுபோல், வாடி இறந்துபடுவேன். இது முறையா?"

கணவன்—"ஐயோ! அம்புகளும் நுழைய முடியாத கல் நிறைந்த அந்த வெய்ய சுரம் உன்னால் அடியிடவும் இயலாத கொடுமை யுடையதன்றோ!"

மனைவி—"அக் கொடிய கானகத்தும் பெரிய கழுத்தினையும் அழகையும் உடைய கலைமானின்பின் நீங்காது திரிந்து இன்புறும் பிணைமானைக் கண்டதில்லையோ? அவை என்றாவது பிரிந்த துண்டா? ஆதலால் யானும் உடன் வரல்வேண்டும்."

இவ்வாறு உரையாடி, மனைவி இயற்கையி னியன்ற ஒழுங்கை யெடுத்துக்கூட்டி, தான் கணவன்மீது கொண்டுள்ள காதலின் பெருக்கத்தை விளக்குவது படித்து மகிழ்தற்பாலதாம். அப் பொருள் பொதிந்த பாட்டு வருமாறு:—

" ஒளிபுரை ஒளவியாய் நின்னடிக் கெளியவோ
தளியுறு பறியாவே காடெனக் கூறுவீர்
வளியினும் வரைநில்லா வாழுநாள் நும்மாகத்
தளியென வுடையேன்யான் அவலங்கொண் டழிவலோ;

ஊறுநீ ரமிழ்தேய்க்கு மெயிற்றாய்நீ யுணல்வேட்பின்
நாறுநீ ரிலவென அறனோக்கிக் கூறுவீர்
யாறுநீர் கழிந்தன்ன இளமை நும் நெஞ்சென்னுந்
தேறுநீர் உடையேன்யான் தெருமந்தீங் கொழிவலோ;

மாணெழில் வேய்வென்ற தோளாய் நீ வரின்தாங்கும்
மாணிழ விலவாண்டை மரமெனக் கூறுவீர்
கோணிழற் றளிர்போல நிறனூழ்த்த லறிவேனுந்
தாணிழல் கைவிட்டியான் தவிர்தலைச் சூழ்வலோ ;

எனவாங்கு,

அணையரும் வெம்மைய காடெனக் கூறுவீர்
கணைகழி கல்லாத கல்பிறங் காரிடைப்
பணையெருத் தெழிலேற்றின் பின்னர்ப்
பிணையுங் காணிரோ பிரியுமோ அவையே.'' (கலித்தொகை—20)

இவ்வாறு சுரத்தில் வாழும் விலங்குகள், அங்குள்ள துன்பங்களையும் பொறுத்துக்கொண்டு, என்றும் பிரியாது ஒன்றிவாழ்ந்து இடையறு இன்பம் துய்க்க வல்லனவா யிருக்கின்றன. ஏதாவது அவற்றினிடையே பிரிவு நேர்வதுபோலத் தோற்றினும், பெண் விலங்கு அப் பிரிவைத் தடுத்து, உடனுறைவதையே விழையும். இறைப்பொழுதும் தனித்தியங்க லாற்றுவாய்த் தவிப்புறும். இதைக் காதலர் இருவர் ஒருநாள் காட்டில் நேரேகண்டு வியப் பெய்தியதுண்டு. அங்கு ஓர் ஓமைமரம் நின்றிருந்தது. அதன் அடியில் நிழல் என்றும் சொல்வதற்குப் பொருத்தமில்லாத வகையாய், பொட்டுப் பொட்டாய் நிழலும் படலை படலையாய் வெயிலும் எனப் பரந்திருந்தது. வழிநடந்து மெலிவெய்திய காதலர் இருவர் அம் மரத்தடியில் இளைப்பாறி யிருந்தனர். அவ்வேளையில் ஓர் ஆண்யானை ஓசைப்படாமல் மெல்லவூர்ந்துவந்து அவ்வோமை மரத்தின் கிளையொன்றை ஒடித்தது. பின் அதைத் தன் கையில் ஏந்திக்கொண்டு, தன் பெண்யானை இருக்கும் இடநோக்கிச் செல்லாமல், வேறொரு வழிநோக்கி அடியெடுத்து வைத்தது. இதைத் தூரத்தில் நின்றிருந்த பெண்யானை பார்த்துக்கொண்டது. அதன் மனத்திற் கோபமும் ஐயமும் குமுறிக்கிளம்பின. வேறொரு பிடியைநோக்கித் தன் கணவன் செல்வதாக மனத்திற்கொண்டு, அக் காடு முழுதும் ஏங்கி எதிரொலிக்கும்படி அரற்றத்தொடங்கிப் பெரும்பூச விட்டது. அந்நிலையில் அக்களிறு வேறு எங்குச் செல்ல முடியும்? உடனே திரும்பித் தன் பிடியை அடைந்தது என்பது சொல்லாமலே விளங்கும். இவ் விலங்குகளின் தன்மையைக் கண்ட காதலர் இருவரும் இறும்பூதெய்தி மகிழ்ந்தனர். பின்னொருநாள் அக்காதலர்களுள் தலைவன் தலைவியைப் பிரியக் கருதியபொழுது, இதனை அறிந்திருந்த அவள்தோழி, அந்த யானைகளை நினைப்பூட்டி, தலைவி வருந்துவள் எனக் கூறும் பாட்டு :—

'' நினைக்கலும் நினைதிரோ ஐய! அன்றுநாம்
பணைத்தாள் ஓமைப் படுசினை பயந்த
பொருந்தாப் புகர்நிழ லிருந்தன மாக
நடுக்கஞ் செய்யாது நண்ணுவழித் தோன்றி

யொடித்துமிசை கொண்ட வோங்குமருப் பியானை
பொறிபடு தடக்கை சுருக்கிப் பிறிதோர்
ஆறிடை யிட்ட வளவைக்கு வேறுணர்ந்
தென்றூழ் விடாகஞ் சிலம்பப்
புன்றலை மடப்பிடி புலம்பிய குரலே."

(நற்றிணை—318)

காட்டுவழிச் சென்ற தன் கணவனை நினைந்து ஒரு பெண் வருந்திக் கொண்டிருந்தாள். அவளைத் தேற்றித் துயர் களையும் தோழி, "அம்மா, நீ வருந்தவேண்டாம். உன் கணவர் உன்மீது அன்புகாட்டி அருளோடு மீண்டுவருவர். அவர்செல்லும் வழியெல்லாம் அன்பின் மயமாகவே தோன்றும். ஆண்இனம் பெண்இனத்தை ஆதரித்துப் போற்றக் காண்பர். ஆண்யானைகள் மெல்லிய கிளைகளையுடைய யா மரத்தின் பட்டையை யுரித்து அதன் நீரைப் பிடிகளுக்கு ஊட்டிமகிழும் காட்சியைக் காண்பர். ஆதலால் உடனே திரும்பி வீடு வருவர்" என்று இயற்கையின் மூலம் உணர்ச்சிகள் எழுவதை நன்கு புலப்படுத்தும் பாட்டு வருமாறு:—

" நசைபெரி துடையர் நல்கலு நல்குவர்
பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பொளிக்கும்
அன்பின தோழியவர் சென்ற வாறே."

(குறுந்தொகை—37)

இச் சிறிய பாடலில் இயற்கையின் உயிர்நிலையே துடிப்பது போன்று விளங்கக் காணலாம்.

சிவஞானபோத விரிவுரை நிறைவு விழா

திரு. இளவழகனார் அவர்கட்குப் பாராட்டும் பரிசளிப்பும்

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் சார்பில் ஏழு திங்களாகத் திரு. இளவழகனாரவர்களால் நடைபெற்று வந்த **சிவஞானபோத விரிவுரைகள்** பேரளவான அன்பர் திரளுடன் தொடர்ந்து செவிமடுக்கப்பெற்று இனிது நிறைவேறினமையின், அதன் நிறைவுவிழா, **24-10-43** ஞாயிறு மாலை 4-மணிக்குச் சென்னைத் தொண்டைமண்டலம் பள்ளி மண்டபத்தில் **மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள்** சீரிய தலைமையில் நிகழும். அப்போது, **செட்டிநாட்டு இளவரசர் சர். A. முத்தையசெட்டியாரவர்கள்** பரிசளிப்புத் தலைவராயிருந்து விரிவுரையாளர்க்குப் பரிசு வழங்க அன்புடன் இசைந்திருக்கின்றனர். தக்கோர் பலர் விழாவிற் கலந்துகொள்வர்.

புத்தனேரி. ரா. சுப்பிரமணியன்

௧௧. இசைப் பேரொலி

கொள்ளைக் கூட்டத்தாரிடையே அகப்பட்டுக்கொண்ட வேடனின் சிந்தைக் கடலில் சிந்தனை அலைகள் கொந்தளித்துக்கொண் டிருந்தன. இத்தகைய பேரிடரிலிருந்து எப்படித் தப்புவதென்று அவன் கலங்கி நின்றான். வல்லியோ கற்புத் தெய்வத்தை மனமாரத் துதித்தவண்ணம் துவண்ட கொடிபோன்று மயங்கி வதங்கினாள்.

கன்னியுங் காளையும் கதிகலங்கி நிற்கும் காட்சியைக் கண்டால் கல்லும் உருகும்! ஆனால் கல் நெஞ்சினனான சோலையப்பனோ கடுகளவும் உருகினானில்லை! தன்னுடைய ஆதிக்கத்தில் அவர்கள் அகப்பட்டுக் கொண்டனர் என்ற ஆணவத்தால் பயங்கரமான வெற்றிச் சிரிப்புடன் தன் கூட்டத்தார் புடைசூழ வல்லியிடம் நெருங்கினான்:

"பெண்ணே! இப்போது என்ன சொல்கிறாய்?..." இந்தச் சோலையப்பனை இனிமேல் ஏமாற்ற முடியாது!........என்று பிதற்றிய வண்ணம் "ஹீ...ஹீ......ஹீ..." என நகைத்துக் கொண்டு அவன் வல்லியை இழுப்பதற்காகத் தன் கையை நீட்டிய அதேசமயம், மின்னல் தாக்குதல் போன்று "படீர்" என ஓர் அறை அவன் கன்னத்தில் தாக்கிற்று! வலி பொறுக்கமாட்டாமல் அவன் கண்கள் கோவைப் பழம் போன்று சிவந்தன. கோப வேகத்தில், "பிடியுங்கள்!... கட்டுங்கள் அவனை!..." என்று அவன் கூச்சலிட்டதைக் கேட்டும் கேளாமலுமாக முரடர்கள் அனைவரும் திடீரென வேடனைச் சூழ்ந்து கொண்டனர்.

தனியே அத்தனை முரடர்களையும் எதிர்த்து வெல்லுதல் முடியாத காரியம் எனக் கண்ட வேடன் ஓவியக் கலைநுட்பம் வாய்ந்த சிலைபோன்று அசைவற்று நின்றான். உடல் மட்டும் அசைவற்றிருந்ததே யொழிய உள்ளமோ உலை நீர் போன்று கொதித்துக்கொண்டுதா னிருந்தது.

இச் சமயத்தைக் கைவிடாமல் வஞ்சகனான சோலையப்பன் பல் அத்தனையும் காட்டிப் பயங்கரமாக நகைத்தபடியே வல்லியை அணுகி,

"ஆரணங்கே! இனி உங்கள் வீரமெல்லாம் என்னிடம் பலிக்காது. உங்கள் மனக் கோட்டையைத் தகர்த்து எறிந்து மண்ணோடு மண்ணாக்கி விடுவேன்!... வீண் பிடிவாதம் வேண்டாம்!... கண்ணே!... எங்கே உன் மலர்க்கையை அன்புடன் என்னிடம் கொடு!..." என்று நயவஞ்சகமாகப் பேசியவனாய் அவள் கையைப் பிடித்து இழுத்தான்!... இந்நிலையில்

உச்சிமீது வானிடிந்து வீழ்வது போன்ற உணர்ச்சியில் வல்லி ‘ஓ’வென்று அலறினாள்!

இக் கொடூரக் காட்சியைக் கண்ணுற்ற வேடன் தன்னைமறந்து, வெறிகொண்டவன்போல் கதறிக் கூத்தாடிக் கொண்டு முரடர்களின் ஊடே பாய்ந்தான்! ஐயோ! அவனால் மீள முடியவில்லை! தம் கையில் சிக்கிய அவனை அப்படியே சேர்த்து அணைத்துத் தூக்கிக்கொண்டு முரடர்கள் மண்டபத்திற்கு வெளியே சென்றனர்.

பெண்மையின் எல்லை கடந்த பெருந்தீரத்தில் சோலையப்பனின் கைப்பிடியை உதறி எறிந்துவிட்டுத் தன் அன்பனைத் தூக்கிச் செல்லும் முரடர்களின் பின்னே முனைந்து பாய்ந்தாள் வல்லி! தன் இரும்புக் கையையே உதறி எறிந்த ஏந்திழையின் இறுமாப்பை அடக்கவேண்டுமென்று மனம் குமுறிக் கொண்டு “கட்டுங்கள் அவளையும்!...” என்று சோலையப்பன் கதறினான்!

சற்று நேரத்தில் மண்டபத்திற்கு வெளியே, ஓர் அழகனும் அழகியும் தனித்தனியே ஒவ்வொரு மரத்தோடு சேர்த்துப் பிணிக்கப்பட்டிருந்த அருவருப்பான காட்சி தென்பட்டது! இந்தக் காட்சியைக் காண விருப்பமில்லாமல் கண்ணை மூடி மூடி விழிப்பதுபோல் வெண்ணிலவோன் மேகங்களின் இடையே மறைந்து மறைந்து தோன்றினான்!

மானம் இழந்து வாழ்தலினும் மண்ணுலகை நீத்தல் மாண்புடையதென்று வேடன் எண்ணினான். அவனுடைய மனதில் பழையநினைவுகள் படிப்படியாக வந்து குமுறின. இதுவரை அவன் இத்தகைய துன்பம் அடைந்ததில்லையாதலால் இத் துயரைப் பொறுக்க இயலவில்லை. தான் பாரிற் புகழ்மணம் பரப்பும் பாண்டிநாட் டிளவரசன் என்பதை எண்ணும்போது நாக்கைப் பிடுங்கிக்கொண்டு உயிர் துறக்கலாமா என்று அவனுக்குத் தோன்றும்! ஆருயிர் நண்பரான முறுவலாரை இடைவழியிற் பிரிந்து வந்ததை நினைத்தால் அவன் நெஞ்சு வெடித்துவிடும்போ லிருக்கும்! கானில் கண்டு கூட்ட வந்த கன்னியைத் தான் காப்பாற்றவியலாம லிருப்பதைக் கருதுங்கால் கடமையில் தவறிய கயவனென்று தன்னையே இகழ்ந்துகொள்வான்! தன் கடமைகளை நிறைவேற்றவாவது தான் கட்டாயம் உயிருடனிருந்துதான் தீர மேண்டுமென்று மனந் துணிவான்! இவ்வாறு வேடனின் மனம் ஒரு நிலையிலில்லாமல் அலைந்தது:

“மயிர்நீப்ப வாழாக் கவரிமான் அன்னார்
உயிர்நீப்ப மானம் வரின்!”

என்ற வள்ளுவரின் வாய்மொழியை மெய்ப்பித்துவிடத் துணிந்தாள் வல்லி. ஆனால் தன்மீது தணியாத அன்பு கொண்டு பேணிவரும் ஆணழகனான வேடனுக்காகவாவது தான் உயிர்வைத்திருக்க வேண்டுமென அவள் மனம் வற்புறுத்தியது. எனவே கொடிய முரடர்களின் வஞ்சகக் கயிற்றால் பிணிக்கப்பட்டிருந்த அம் மங்கையும் வேடனும் வாய்விட்டு ஒன்றும் பேசாமல் தம் கண்களின் வழியே உள்ளக் குமுறலைக் கண்ணீர் அருவியாகப் பொழிந்துகொண்டிருந்தனர்.

இவர்களைச் சுற்றிலும் நெருப்புப் பந்தங்களை விளக்குகளாகப் பிடித்துக்கொண்டு கொள்ளைக் கூட்டத்தார் குதூகலித்திருந்தனர். அவர்களுக்கு மத்தியில் கெம்பீரமான ஆணவப் பார்வையோடு சோலையப்பன் நின்றுகொண்டிருந்தான்! மேலும் என்னென்ன வகையில் வல்லிப் பெண் கொடியாளை மயக்கலாம் என்று அவன் சூழ்ச்சி முறைகளை ஆலோசனை பண்ணிக்கொண்டிருந்தான்.

அவனுடைய ஆலோசனையைக் கலைத்துக்கொண்டு "ஐயா!" என்று யாரோ கூப்பிடும் குரலைக் கேட்டுத் திரும்பியபோது, அழைத்தது கட்டுண்ட வேடன் எனக் கண்டு அவனிடம் சென்று,

"என்ன சொல்கிறாய்?..." என்று அதட்டினான்.

மரியாதையின்றி அவன் ஒருமையில் பேசியதைக் கேட்ட வேடன், அக் கொடியவனுக்குச் சரியான சொற்சூடு கொடுக்கவிரும்பி, "மானிடப் பதரே! .." என்று விளித்து, "வீண் கர்வம் கொள்ளாதே!...... வேண்டுமானால் அதோ, அவர்கள் வைத்திருக்கும் தீப் பந்தங்களால் எங்களைச் சுட்டெரித்துவிடு!..." என்று மனங்கொதிக்கக் கூறினான்.

வேடனின் பேச்சைப் பொருட்படுத்தாமல் 'சரே'லென அவ்விடத்தைவிட்டு அகன்று மறுபடியும் ஆழ்ந்த யோசனையில் மூழ்கினான்.

இச்சமயம், என்றுங் கேட்டிராத புதியதோர் ஓசை திடீரென எழுந்து எல்லோரையுந் திடுக்கிடச் செய்தது. சற்றுநேரத்தில் அவ்வொலி தெளிவாகக் கேட்டது! இன்னிசை பாப்பும் பேரொலியாக இருந்தது! சிங்கிகள் 'கணீர், கணீர்' என்று ஒலித்தன. தாளவாத்தியங்கள் முழங்கின. பலதிறப்பட்ட மனிதக் குரல் கலந்த தமிழ் ஓசையும் விரவி வந்தது. பலர் கூட்டமாகக் கூடிப் பாட்டுப் பாடி வருகின்றார்கள் என்பதை ஊகிக்க முடிந்தது. மகிழ்ச்சி வெள்ளம் ஆரவாரித்துக்கொண்டு தமிழ் இசை அலைகளுடன் பெருக்கெடுத்து வருவதுபோன்ற உணர்ச்சி எழுந்தது.

இந்த ஒலியைக் கேட்டதும் மூடர்களின் மனதில் சிறிது அச்சம் தோன்றியது.

எனவே சோலையப்பன் தன் கூட்டத்தாரில் இருவரை வேடன்-வல்லி இவர்களுக்குக் காவலாக வைத்துவிட்டு மற்றவர்களுடன் சோலையின் வாசற்பக்கம் போனான். புதிதாக வரும் இசைக்கூட்டத்தைச் சோலைக்கு வெளியிலேயே நிறுத்தி விடுவதற்கேற்ற தந்திரம் செய்வதென்னும் மன உறுதியுடன் அங்கு நின்றுகொண்டான்.

தமிழ் இன்னிசை பாப்பும் புதிய பேரொலியைக் கேட்டதும், கட்டுண்டிருந்த வேடனும் வல்லியும் புத்துணர்வு பெற்றனர். நேரம் செல்லச் செல்ல இசையின் ஓசை தெளிவாகக் கேட்டது. அந்த ஓசையுடன் "தூண்டிவில்" என்ற தமிழ்ச் சொல்லும் கலந்து வருவதைக் கேள்வியுற்ற வேடனின் உள்ளத்தில் ஒருவித பூரிப்பும் திகைப்பும் அவனறியாமலே ஏற்பட்டன. இசைக் கூட்டத்தார் வரும் திசையை நோக்கித் தங்கள் முகத்தைத் திருப்பிக்கொண்டு, வேடனும் வல்லியும் நடக்கப் போவதை மிக்க ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். (தொடரும்)

செய்திகள்

அணி மண்டபத் திறப்புவிழா

பழனியில், மலைக்கோயில் முன், மணி மண்டபத்தையொட்டித் தெற்கு நோக்கிய திருமதிலுக்கும் சிற்றுண்டிச்சாலைக்கும் இடையே உள்ள வெளியிடத்தில், 'உடுமலை, பழநி ஆண்டவர் மில்ஸ், லிமிடெட்' அவர்களால், கட்டுவிக்கப்பெற்றுள்ள அணிமண்டபம் (வித்தியாதர மண்டபம்) ஆவணி மாதம் 31-ம் தேதி (16-9-43) வியாழக்கிழமை அன்று காலை தூய்மைச் சடங்கு செய்வித்து, கோவைப்பெரியார் உயர்திரு. திவான்பகதூர் சி. எஸ் இரத்தினசபாபதி முதலியார் அவர்களால் திறந்துவைக்கப்பெற்றது. அக்காலை, சென்னை இந்துமத அறநிலையக் காப்புத் தலைவர் திரு டி. எம். நாராயணசாமி பிள்ளையவர்களும், அதன் ஆணையாளர், திரு. சி. எம். இராமச்சந்திரன் செட்டியார் அவர்களும், சர். பொன்னம்பலம் தியாகராஜன் அவர்களும், சென்னை டாக்டர் உயர்திரு எம். ஆர். குருசாமி முதலியார் அவர்களும் மற்றும் மில் ஏஜன்டுகளும், பெரியார்களும் வந்திருந்தனர். தலைவர் திரு. முதலியாரவர்களுக்கு இரண்டு வாழ்த்து இதழ் படித்துக் கொடுக்கப்பெற்றது. கோயில் அதிகாரிகள் ஆண்டவன் திருவுருவினை அணிசெய்து புறப்பாடு செய்வித்து மண்டபத்தில் எழுந்தருளுவிக்கத் தலைவர், யாவருடைய குதூகலத்திற்கிடையே மண்டபத்தைத் திறந்து வைத்தனர். இம் மண்டபத்தை எடுப்பதற்குப் பணி இயற்றிய உடுமலை, 'பழநி ஆண்டவர் மில்ஸ் மானேஜிங் ஏஜன்ட்ஸ்' உயர்திரு. ஆர். குருசாமி நாயுடு, ஜி. டி. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களைப் போற்றியும், நமது ஞானதண்டாயுதபாணியின் தண்ணருளானது தென்னிந்தியர் ஒவ்வொருவராலும் வடநாட்டினராலும் போற்றி வருவதொன்றாகுமென்றும், கடவுள் அன்பு குறைந்திருந்த ருஷியாபோன்ற நாடுகளும் இப்போது அதனையே கடைப்பிடித்து ஒழுகுவதாகவும், ஆதலின் மனித வாழ்க்கைக்குக் கடவுள் அன்பே இன்றியமையாத பெருந்துணை என்றும் இத்தகைய திருப்பணிகள் அன்பர்களுக்கு வசதியும், தமிழ்க்கலையும் பண்பும் விளக்குவதற்கு உற்ற பெரு நலனுமாகுமென்றுஞ் சொல்லிப் பாராட்டினார்கள். திருப்பணியாளர்களுக்காகத் திரு. ஆர். குருசாமி நாயுடு அவர்கள் நன்றியுரை கூறினர். பின்பு வந்திருந்தவர்களுக்கு விருந்துணவும், மாலையில் திரு. முசிரி சுப்பிரமணிய அய்யர் அவர்கள் இசையரங்கும் நடைபெற்றன.

சேலம் கல்லூரித் தமிழ்க் கலைக் கழகம்

திறப்பு விழா

மேற்படி கழகத்தின் திறப்பு விழா 14-9-43 மாலை வழக்குரைஞர் திரு. E. R. நரசிம்ம ஐயங்கார் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. அவ்வமயம் ஆசிரியர் திரு. அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள் "சங்கமும் நூற் புலவரும்" என்பதுபற்றி அரியதொரு விரிவுரை நிகழ்த்தி மாணவர்க்குத் தமிழுணர்ச்சியை ஊட்டினார்கள்.

17-9-43 மாலை 5-மணிக்குப் பெருநிலக் கிழார் திரு. நடேச பண்டாரம் அவர்கள் தலைமையில் உயர்திரு. சித்பவானந்த அடிகளார்

"அறத்தாறு" என்ற பொருள் பற்றி மிகவும் சுவைபட விரிவுரை ஆற்றினார்கள்.

இராமலிங்க அடிகள் பிறந்தநாள் விழா

1-10-43-ல் அடிகளின் 121-ம் பிறந்தநாள் விழா, சென்னை சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தாரால், சென்னைத் தொண்டைமண்டலம் பள்ளிக்கூட மண்டபத்தில் **கழகப் புலவர் இளவழகனாரவர்கள்** தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. பேரவை, மண்டபம் நிறைந்திருந்தது. அடிகள் வாழ்க்கை, அருட்பா, சீர்திருத்தங்கள் முதலியவற்றின்மேல் அரிய உரைகள் நிகழ்ந்தன.

தருமையாதீனத் தலைவரவர்களின் பத்தாண்டு ஆட்சிவிழா

5, 6, 7-9-43-ம் நாட்களில் இம் மாபெரும் விழா தருமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றபோது, ஆதீனச் சார்பில், திரு. க. வச்சிரவேல் முதலியார், பி. எ., பி. எல். வித்துவான் ஒளவை சு. துரைசாமி பிள்ளை, வித்துவான் இராம. கோவிந்தசாமிப் பிள்ளை, வித்துவான் ச. தண்டபாணி தேசிகர், வித்துவான் முத்து. சு. மாணிக்கவாசக முதலியார், வித்துவான் வை. குஞ்சிதபாதம் பிள்ளை என்னும் எழுவர்க்கும் **தருமையாதீனத் தமிழ்ப் புலவர்** என்னும் பட்டமும், இசையரசு மு. தண்டபாணி தேசிகாவர்கட்குத் '**தருமையாதீன இசைப் புலவர்**' என்னும் பட்டமும், சிவத்திரு ஈசான சிவாச்சாரியாரவர்கட்குச் '**சைவசித்தாந்த சரபம்**' என்னும் பட்டமும், பாலகவி வே. இராமநாதன் செட்டியாரவர்கட்குத் '**தருமையாதீன வித்துவான்**' என்னும் பட்டமும் வழங்கப்பெற்றன. பாலகவியவர்கட்கு இப் பட்டம் வழங்கியது குறித்துத் தேவகோட்டைச் சைவப் பிரகாச வித்தியா சாலை யாசிரியர்களால் 26-9-43-ல் ஒரு பாராட்டுக் கூட்டமும் நிகழ்ந்தது மகிழ்ச்சிக்குரியது.

தேநீர் விருந்து

திருவாளர் திருவொற்றியூர் T. சண்முகம் பிள்ளையவர்கள் செங்கற்பட்டு மாவட்டத்தின் நாட்டாண்மைக் கழகத் தலைவராக (President, District Board, Chingleput) அண்மையில் தேர்ந்தெடுக்கப்பெற்றமை குறித்துச் சென்னைப் பெத்துநாய்க்கன்பேட்டைத் தமிழன்பர்கள் மகிழ்ந்து 10-10-43-ல் ஒரு தேநீர் விருந்தும் பாராட்டுக் கூட்டமும் நடத்தினார்கள். திரு. T. சண்முகம் பிள்ளையவர்கட்குத் '**தமிழ்ப் புரவலர்**' என்னும் பட்டம் ஒரே மனதாய் வழங்கப்பெற்றது.

பாலசுப்பிரமணிய பக்தசன சபை

சென்னை இராயப்பேட்டையிலுள்ள இச்சபையின் 31, 38, 39-ம் ஆண்டு விழாவும், திரு. வி. க. மணிவிழாவும் 15, 16, 17-10-43-ம் நாட்களில் முறையே இராவ்பகதூர் திரு. சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள், திவான்பகதூர் திரு. டி. எம். நாராயணசாமிப் பிள்ளையவர்கள், பெருஞ்சொற்கொண்டல் புரிசை திரு. முருகேச முதலியாரவர்கள் தலைமையில் நடைபெறும். கடைசிநாளில் திரு. வி. க. படத்திறப்புவிழா

திரு. சி. என். முத்துரங்க முதலியாரவர்களால் நிகழப்பெறும். மூன்று நாட்களிலும் அறிஞர்களின் இனிய சொற்பொழிவுகள் நிகழும்.

மதுரை முத்தமிழ் மாநாடு

1-10-43-ல் இம் மாநாடு மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள் அரிய தலைமையில் தொடங்கியது. சென்னை இந்து அறநிலையப் பாதுகாப்புக்கழக ஆணையாளர் இராவ்பகதூர் சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள் முத்தமிழ்க் கொடி ஏற்றினர். சர். பி. டி. ராஜன் அவர்களால் மாநாடு திறந்து வைக்கப்பெற்றது.

மதிப்புரை

1. திருநாரையூர்த் திருமுறை: பதிப்பித்தவர்: ந. சொ. அரு. அருணாசலன், தியாகராயநகர், சென்னை; இலட்சுமிபுரம் சொக்கலிங்க வித்தியாசாலை வெளியீடு—5. முக்காலணா அஞ்சற்றலை அனுப்பி விலையின்றிப் பெறக்கூடியது.

தில்லைக்குக் காதம் தொலைவில் உள்ள திருநாரையூர் என்னும் திருப்பதியின்மேல் எழுந்துள்ள தேவாரப் பதிகங்களும், திரு. இரட்டைமணி மாலையும், அப்பர் சம்பந்தர் நிகழ்ச்சிகளைக் குறிக்கும் திருத்தொண்டர் புராணச் செய்யுட்களும், திருமுறை கண்ட புராணமும் ஒருங்கு தொகுக்கப்பட்டு இச் சிறு நூல் வெளிவந்துள்ளது. திருநாரையூர்த் திருமுறைப் பாடல்களை ஒருங்கே கண்டு பயில்வதற்கு ஏற்ற கருவியாக இது, உதவும். அச்சும், தாளும், அமைப்பும் அழகாக உள்ளன.

2. திருப்புகலூர்த் தல வரலாறு: ஆசிரியர்: G. கலியாணம் பிள்ளை, B.A., Dip. Econ. வெளியிட்டவர்: திருப்புகலூர்த் திருக்கோயிலார்.

சென்னை அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தார் ஏற்பாடு செய்துள்ளபடி திருக்கோயிலின் வரலாற்று விளக்கங்கள் கோயில்கள்தோறும் வெளியிடப்பட்டு வருதலால், அம்முறையில் இந்நூலும் நல்ல வகையில் வெளிவந்துள்ளது. முருக நாயனர் தோன்றியதும், அப்பர் பேரின்பப்பேறு அடைந்ததும் இத் திருப்பதியாகும். வரலாறு, திருக்கோயில் கடைமுறை, நூல்கள், கல்வெட்டுக்கள் முதலியன விளக்கப்பட்டுள்ளன. திருக்கோயில் விளக்கப்படமும், நிழற்படங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இறுதியில் திருப்புகலூர்த் தேவாரங்களும், திருப்புகலூர் அந்தாதியும் இணைக்கப்பட்டுள்ளன. இத்தகைய நூல்கள் அனைவர்க்கும் பெரிதும் பயன்தருவனவாகும்.

3. தணிகைநாயகன் மாலை: ஆசிரியர்: தணிகைமணி ராவ் பகதூர் வ. சு. செங்கல்வராய பிள்ளை எம். ஏ. விலை அணா 4.

இது, செய்யுள் நூல். நூற்றுக்கு மேற்பட்ட திருவிருத்தங்களால் அமைந்த புதிய நூல். ஆசிரியர், தணிகை முருகன் திருவடித் திறத்தில் நாளும் தனியாக் காதலுற்றுத் தொண்டு செய்துவருங் கெழுதகைமையால், தமது அறுபதாம் ஆண்டின் நிறைவுத் திருநாளில் (15-8-1943), இம் மாலை நூலை யாத்து, அப் பெருமானுக்கு, "அடியேன் உரைத்த புன்சொல் - அது மீது நித்தமுந் தன் - அருளை தழைத்தூக்கந்து - வரவேணும்" என்று ஓர் இனிய வேண்டுகோளுடன் அடியுறையாக வழங்கியிருக்கின்றனர். அன்பு நிறைந்த இந்நூல், அனைவரும் உருகி ஓதுதற்குரிய இனிய எளிய செய்யுட்களால் அமைந்துள்ளது. அறிவுக்கு இன்பந் தருங் கற்பனைகளும் அணிகளும் செய்திகளும் அங்கங்கும் மிளிர்கின்றன. நூலுக்கு முன்னும் பின்னும் உரிய குறிப்புக்களும் உள்ளன. முருகன் அன்பர்க்கு இது சிறந்த விருந்து.

4. சுட்டு விளக்கம் அல்லது அடிப்படை வேர்ச்சொல் ஐந்து :

ஆசிரியர்: புலவர் ஞா. தேவநேயன் B. O. L. கிடைக்குமிடம்: சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. விலை ரூ. 1-4-0.

இந்நூல், மொழிநூற் கலையாராய்ச்சியின் திறவுகோல் என்று சொல்லலாம். இந்நூலின் முகவுரை, இந்நூல் எழுதற்கு ஏற்ற திட்டமான அடிப்படையினை முன்னறிவாக நன்கு வகுத்துக் காட்டுகின்றது. நூலுள், முன்னுரை என்னும் பகுதி, மொழி தோன்றிய வகை, தமிழ் தனி இயற்கை மொழியாதல், தமிழ்ச் சொற்களின் காரணக் குறித்தன்மை, தமிழில் நெடில் முன்னர்த்தோன்றினமை முதலிய கருத்துக்களைத் தெளிவாக விளக்குகின்றது. அடுத்து, இரண்டாம் பகுதியில், சேய்மைச் சுட்டாகிய ஆ, அண்மைச் சுட்டாகிய ஈ, முன்மைச் சுட்டாகிய ஊ, எழுகைச் சுட்டாகிய ஏ, உயரச் சுட்டாகிய ஓ, என்னும் ஐஞ்சுட்டுக்களின் தோற்றம் தலைப்படுகின்றது. மூன்றாம் பகுதியில் இச் சுட்டெழுத்துக்களாகிய அடிப்படையிலிருந்து அவற்றினடியாகப் பிறந்த சொற்கள் பலப்பல, தக்க ஒப்பு நோக்குகள் முதலியவற்றுடன் தனித்தனியாக வகுத்தெடுத்து விரிவாக விளக்கப்படுகின்றன. இறுதியில் நான்காம் பகுதியாக மூவிடப் பெயர்களும் ஐந்தாம் பகுதியாக வினாப்பெயர்களும் பற்றிச் சிற்சில குறிப்புக்கள் வருகின்றன; கத்தொலிகளும் ஒலியடிச்சொற்களும் என்பதும், குறிப்பொலிகளும் குறிப்புச் சொற்களும் என்பதும் பிறவும் பற்றிப் பின் இணைப்புக்களும் வேறே உள்ளன.

120 பக்கங்களில் அமைந்த இச் சிறு நூல் தமிழ்க்கும் தமிழ்மக்கள் மாட்சிமைக்கும் மிக இன்றியமையாததாய்ப், பெரிய ஒளி விளக்கம் உண்டு பண்ணுவதாய்ப், பெரிதும் பயன்படத் தக்கதாய் அமைந்துள்ளது. தமிழ் மாணவர், தமிழாசிரியர், தமிழாராய்ச்சியாளர் முதலியோர்க்கும், பொதுவாக மொழிநூற்கலை மேற்கொள்வோர்க்கும் இந்நூல் கட்டாயமானது. ஆசிரியர் உதவி பெரிதும் பாராட்டற்பாலது.

கல்விப் பணி

குலசேகரன்பட்டினம், திருநெல்வேலி மாவட்டம்.

சென்னைப் பல்கலைக் கழகத்தார் தேர்வு நடத்தி அளிக்கும் பட்டங்களுள் B. A., B. Sc., B. Com. இவைகளைப்போல் **B. O. L.** என்பதும் ஒன்று. இதற்கு ஆங்கிலம், தமிழ் இவைகளின் இலக்கியங்கள், தென் இந்திய வரலாறு, திராவிட மொழி நூல், இந்நான்கு பாடங்களிலும் தேர்வு நடத்துகிறார்கள். இத்தேர்வுக்கு, முன் தேர்வாக உள்ள இன்றர்மீடியேற் தேர்வுக்கு ஆங்கில இலக்கியமும் தமிழ் இலக்கியமும் மாத்திரம் பாடம். இந்த இன்றர்மீடியேற் தேர்வுக்கு, வழித்தேர்வாக ஆங்கிலத்திலும் தமிழிலும் இரு தேர்வுகள் நடத்துகிறார்கள்.

௨. தமிழில் நடத்துகிற வழித்தேர்வு பல்கலைக் கழகத்தார் நடத்தும் **வித்வான்** பட்டத்தேர்வுக்கும் வழித்தேர்வாகும்.

௩. உயர்தரத் தமிழும் ஆங்கிலமும் பயின்று **B. O. L. பட்டத்தேர்வுக்குப்** படிக்க விரும்புகிறவர்களுக்கும் உயர்தரத் தமிழ் மாத்திரம் பயின்று **வித்வான்** பட்டத்தேர்வுக்குப் படிக்க விரும்புகிறவர்களுக்கும் உதவியாக இருமொழிகளிலும் பல்கலைக் கழக வழித்தேர்வுகளுக்கு **மாணவ மாணவியர்களைப்** பயிற்றுவிக்கும் நோக்கத்துடன் குலசேகரன்பட்டினத்தில் தனி வகுப்புக்கள் **௧௯௪௩** செப்ற்றம்பரில் துவக்கி நடத்தப்படுகின்றன.

மேலே, சொன்ன பல்கலைக்கழக வழித்தேர்வுத் தனிவகுப்புக்கு மூன்றாவது பாரம் (form) தேறியவர்கள் சேரலாம். மாணவ மாணவியர்களை ஈராண்டில் இருவழித்தேர்வுகளுக்கும் ...குதியுடையவர்களாக்கும்படி வகுப்புப்பாடத் திட்டங்கள் ...ப்பட்டிருக்கின்றன. மூன்றாவது பாரத்திற்கு மேல் ...ள்ளவர்கள் விரும்பினால் திறமையுமிருந்தால் ஓராண்டி... வழித்தேர்வுகளுக்கும் போகலாம்.

... வேண்டியவர்கள் நேரிலாவது அஞ்சல் வழி ...காள்ளலாம். விடைவேண்டும் ஒவ்வொரு ...ரண்டு அனுப்புகிறவர்களுக்கு அஞ்சல்வழி